# வானவில்



மலர்:02

இதழ்:01

ஆற்றல் மேம்பாட்டுக் கழகம்

சைவச் சிறுவர் இல்லம்

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# வானவில்

திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும் - பாரதி.


## ஆற்றல் மேம்பாட்டுக் கழகம்
## சைவச் சிறுவர் இல்லம்
## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## திருநெல்வேலி , யாழ்ப்பாணம்.

### செயற்குழு - 2009

**காப்பாளர்** : திரு. அ. தற்பரானந்தன்
**ஆலோசகர்** : திரு. சோ. பத்மநாதன்
**முகாமையாளர்** : திருமதி சிவசக்தி இராதாகிருஷ்ணன்
**தலைவர்** : செல்வன் சின்னத்தம்பி தவலதன்
**உபதலைவர்** : செல்வி நடராசா விஜயராணி
**செயலாளர்** : செல்வி வியாகரத்தினம் கஜிதா
**உபசெயலாளர்** : செல்வி ரகுநாதன் கனிதா

**இதழாசிரியர்கள்**
: செல்வி ராஜன் ரஜீவனா
: செல்வி சண்முகநாதன் விஜிதா

**வகுப்புப் பிரதிநிதிகள்**
: செல்வி பாலேந்திரன் ஹேதினி
: செல்வி இரத்தினகோபால் அம்பிகா
: செல்வி சூரியநாதன் ரேகி
: செல்வி சிவம் ஜெசிந்தா
: செல்வன் துரைராஜா ஜெகன்நாத்

**ஒருங்கிணைப்பாளர்கள்**
திரு. வே. க. சந்திரகுமார்
(ஆசிரியர், உளவளத் துணையாளர்)
திருமதி. மேரி பெனிக்காபிலிப்
(ஆசிரியர், உளவளத் துணையாளர்)


## காப்பாளரின் ஆசிச் செய்தி

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆற்றல் மேம்பாட்டுக் கழகமானது "வானவில்" எனும் சஞ்சிகையை வெளியிடுகின்றது. மாணவர் ஆக்கங்களை தாங்கி வெளிவரும் இச் சஞ்சிகைக்கும் இதனை அழகுற வெளியிடும் ஆற்றல் மேம்பாட்டுக் கழகத்திற்கும் எனது ஆசியையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ.தற்பரானந்தன்**
தலைவர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
திருநெல்வேலி..

## இதழாசிரியர் கருத்து

எங்கள் மனதிலிருந்து........

வணக்கம்

ஆற்றல் மேம்பாட்டுக் கழகத்தின் இரண்டாவது இதழோடு உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். எம்மிடத்தில் உள்ள திறன்கள் வெளிக்கொண்டுவரப்பட்டு "வானவில்" என்னும் பெயர் தாங்கி இவ்விதழ் வெளியிடப்படுகின்றது. இந்நாளை ஒரு பொன்னாளாகவே நாம் கருதுகின்றோம். எம் ஆக்கங்களைத் தாங்கிய இவ்விதழிற்கு எவ்வித இடையூறும் ஏற்படாது அருள் செய்த இறைவனை நாம் பணிந்து வணங்குகின்றோம். எம்முடைய எண்ணங்களுக்கு வர்ணம் தீட்டியும் எமது உள்ளத்தில் உள்ளதைப் பகிர்ந்து கொள்ள கவிவரியாகவும், கதையாகவும் எனப் பல ஆக்கங்களாக வெளியிடுகின்றோம். எமது திறமைகளை வானவில் என்னும் இவ்விதழ் மூலம் வெளியிட எமக்கு உதவிய சகல ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது எண்ணங்களால் உருவான வானவில் உங்கள் மனம் எனும் வானத்தில் தோன்றும் நேரம் பல வர்ணங்களைக் காட்டும் என்று நம்புகின்றோம்.

எமது வானவில் தாங்கி வரும் அனைத்து ஆக்கங்களும் எமது மாணவர்களின் திறமையையே வெளிக்காட்டுகின்றன. இவ்விதழ் உங்கள் மனங்களில் இடம்பிடித்து வானளாவி நிற்க வேண்டும். அதற்கு நீங்கள் எமக்கு ஆதரவு அளிக்க வேண்டும். இவ்விதழுக்கு சங்க மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் ஆக்கம் தந்ததையிட்டு மகிழ்வடைகின்றோம். சமூகத்தில் ஒரு மனிதன் ஏதாவது காரணத்தினால் மனமுடைந்து விடுகின்றான். அவ்வாறு வாழும் மனிதன் இனி சாவா, வாழ்வா என்று யோசிப்பானே தவிர தன்னுள் உள்ள திறன்களை வெளிக் கொண்டு வருவது எப்படி என்று யோசிக்க மாட்டான். தமக்குள்ளேயே தம்முடைய ஆற்றலை ஒடுக்கி வாழும் உயிர் எத்தனை அத்தனைக்கும் இது விடிவிளக்காய் விளங்கும் வானவில்லானது வானத்தில் எவ்வாறு பிரகாசமாக பிரகாசித்துக் கொண்டிருக்கின்றதோ அது போல எமது இல்லத்தில் இருக்கும் ஒவ்வொரு மாணவர்களும் பிரகாசமாக உலகில் வேண்டும். அதற்கு இறைவன் அருள் புரிய வேண்டும்.

நன்றி

இதழாசிரியர்கள்.

## What is child abuse?

- Verbally abusing a child
- Teasing a child unnecessarily
- Exposing a child to pornographic? Acts or literature
- Touching a child to touch you.
- Breaking down the self can fi. Dane of a child
- Hitting or hurting a child often to relieve your own frustration
- Manipulating a child for example an unclean, unclothed unfed child
- Using a child as a servant
- Not listening to a child
- Neglecting emotional need of a child
- Making your own child a servant depriving it of time for education leisure
- Hitting and ridiculing a child at school
- Neglecting a child's medical needs
- Neglecting a child's educational needs
- Leaving a child without supervision

Miss. G.Roshany
Grade 10



## My Mother

I have a loving and caring mother. My mother is great her motherly affections are unique. I love my mother very much, she loves me too. My mother is short and slim. But her hair is stlblack

She always wears her hair in a konde. When she is working in the kitchen. she likes to sit on a stool and clean the rice. My mother wears spectacles but when she sews she has a habit of taking off her spect a ces. my mother usually speaks Sinhala but she understands Tamil as well

By k.kqmsha
Grade - 04

## TSUNAMI

Tsunami is a Japanese word.on the 26th of December 2004 Sri Lanka, Thailand, Indonesia and India were affected by Tsunami. The destruction in Sri Lanka was estimated to the value of 10,000 million dollars and in addition to this 40,000 people lost their lives and more than 100,000 were injured. The people who died injured were elders, youths and children. Many people were left homeless and many lost their belongings and they were put in temporary refugee camps and schools. which was carrying passengers from Colombo to Matara was washed off by the rushing water and most of the people who traveled in that train died. boats and catamarans tied in the shores along the sea side were either damaged or washed away into the sea along with fishing nets and ropes inside the boats. It was a very bad disaster, which can not be imagined.

When this message spread all over the world, many countries came forward to help us financially medically without showing any signs of disagreement or prejudice. Financial help is still flowing in to rebuild the country. the nation stands together leaving aside race, caste or religion. it is very difficult to say whether it is for the good or bad God sent this Tsunami. Put lets not challenge the Gods' will or his actions.

V.Elankeswaran
Grade - 11

## Olympic Games

The 1956 Olympic Games will carry on a tradition dating far back beyond the birth of Christ. While the modern games have only a brief history of 60 years, the ancient Olympics lasted for over elevn centuries from 776 B.C.

The festivals was held every four years in honour of Zeus, the Greek god of gods, in the valley of Olympia in south western Greece. They were held in such reverence that the Greeks with drew their armies from the field of battle and peace reigned throughout the land during the festival.It was open to all law abiding Greeks who were free men and who had undergone the prescribed ten months' training, to fit them for their test.

The contests, of which the most important were the pentathlon, Wrestling boxing, the pan ration, the discus, the javelin, foot racing and chariot racing, attracted the interest of the whole Hellenic world, from Sicily to Asia minor.

Winners were crowned with garlands of wild olive branches and their native states or cities heaped additional honors on them. The pan ration title was one of the most coveted of all. This contest was a combination of boxing and wrestling, with kicking, striking and strangling permitted.

Boxing was decided in a similar manner. Classification by weight was unknown and it consequently became the province of heaviest men. Foot racing was over multiples of the length of the stadium, 200 yards, and jumping was confined to broad jumps. The games were abolished by the Roman emperor Theodosius I, in 394 A.D.

Miss. Suganthiny Sooryakumar
O/L, 2008

## Computer


Today we live in the age of computer and marvel at what the computer is doing. It is indeed doing a wonderful work. Computer is a marvel of the modern age. We really marvel at the amazing speed the computer is working.

Computer has brought a big revolution in global communication. It has made a global village. Computer works hundred times faster than the human brain. computer today dominates in Office, Banks, Business establishment and Industries.

English is gaining momentum being the language of the computer. Computer education is spreading a and wide across the globe. English educated and computer literate youths have employment opportunities. There is a growing demand for Software engineers at home and abroad. Computer education has been introduced in colleges and universities. Computer units have been set up at the universities and colleges. English and computer knowledge make a life line for future.

Computer knowledge is so very important that we can't imagine our future without English and computer knowledge. A computer has several essential components. It has a machine with monitor, key board, a mouse and a central processing unit (C.P.U.)

The monitor is like the screen on television which displays all visuals. It is called the visual Display. Computer is playing a vital role in communication.



S.Jasintha

## Caring for Elders

Every day in our life. We come across many elderly people. But how many of us take time to care for them? Let's begin with the grand parents in our homes. So many of them are neglected.

Their children keep them always in a room or take them to a home for the aged. they should be taken care of

Before we advise people we should first see whether we care for the elders in each of our homes. Caring may be done even by reading a book to them. Taking them for a walk or just sitting and chatting with them.

Caring is due not only for old people but also our parents and teachers as they are also elder to us . we should not retort to them. We should respect and care for them we should help them work in the house.

We should care fore the teachers by doing our work in time as it is easier for them. many children never obey their teachers if one is traveling in a bus and sees an elderly person standing he should offer his seat.

This good habit is hardly practised today Many children. look the other when was they see elderly people. We should care for all elders keeping in mind that we too will grow old.

K.Tharsiny

## Internet

Now the internet has become the most popular companion for all people. They have different net works and people use it for education and to play games mostly. People can know about every thing around the world from the internet. Children can gain a lot of information about scientist, countries, books every thing that children don't know.

But some people use Vulgar networks and they do Undesirable things in the internet and they become bad people.

People Can gather useful information through the internet. With useful information we can be good persons to our society. Internet is not the media that makes bad people. therefore we ought to use the internet correctly and be a useful and complete person to the society.

S.Anoya
Grade 11

## The Olympic Games

The Olympic Games were a multi sport competition held in ancient Greece in 776 BC. They were held in Athens. In the ancient Olympic Games there were only a few sporting events and only men could take part in them.

The first modern Olympic games were held in Athens in 1896. There are a lot of sporting events in the modern Olympic games and both men and women can take part in them.

In the ancient Olympic games the winners received a wreath made of wild olive leaves. In the Olympic games of today the winners receive medals. The winner gets a gold medal gand the second and the third get silver and bronze medals. In the Olympic games held in the year 2000 in Sydney, Sri Lanka's Susanthika Jeyasinghe won the bronze medal for the women's 200 meter race.

Balenthiran Kethiny
A/L 2010, Batch

## The Importance of English

English is vital today in the fast changing world. English is taking a new dimension in the international arena. English is a jewel among Languages it occupies a pride of place in the world. English is the Language of the Computer.

English is a gateway to world knowledge and international relationship. English dominates in the international arena. English is the official Language of the governments of the world. English is the official Language of many world organizations tike the U.N.O, UNICEF, I.C.R.C, U.N.H.C.R and English is essential for university, Education, for professional courses and for computer course, English is essential to seek foreign employment. A country without English, will be cut off from the rest of the world and will be plunged into the darkness of ignorance. The importance of English is felt by one and all. Great effort is taken by Education authorities to enhance Language skills.

Special English courses have been introduced to help students improve the knowledge of English. The standard of English is gradually improving students who neglected English over the years find. it an uphill task at the university to complete the chosen course.

Better late than never. even now it is not late to learn English. Right now make a fresh start to learn English. bear it in mind English is the life line for your future. Learn English and prosper in life.

Miss. V.Kayathiri
Grade - 11

## Mother Teresa

In the year 1910 a girl child was born to an Albanian builder. She was named Agnes Gonxha Bojaxhiu. The father died when she was seven. Her mother brought up her three children with great difficulty. At the age of twelve the young girl made up her mind to become a nun. At eighteen she joined the Loreto order of nuns. She came to Calcutta and become a teacher at Loreto Entally School. India became her home.

Gradully she saw the suffering humanity around her. The destitute and the disabled disturbed her soul. She felt suffocated inside the high walls of the school. she left the convent to help the poor while living with them. "Missionaries Charity" came into existence and Agnes Gonxha Bojaxhiu becames. Teresa. Mother Teresa "The Saint of Gutters" started her work of 'service to her fellowmen'

Dressed in a white saree with blue border, very soft spoken, fair looking, she worked tirelessly to relieve pain, disease and unhappiness of the poor, the disabled and the diseased; She worked with love and compassion in her heart and faith in God. Gradually others started alone but today her order works in 120 countries where it runs 169 educational establishments, 1369 clinics and 755 homes. The moving spirit of mother Teresa fires the heart of every worker of her order; there is nothing but respect the whole hearted support for the work of Sisters of Charity.

She was awarded the Nobel peace prize, the Leo Tolstoy international Award, the Bharat Ratna and hundreds of other honors. The great dignitaries of the world, including the Pope showed their appreciation and respect for Mother Teresa.

On September 5, 1997 Mother Teresa died. But her work and influence continues. The fire she lighted goes on.

Miss. Nanthiny Raveendiran
Year - 10

## Parallel Proverbs ஒத்த பழமொழிகள்

1. Art is long and to life is short
   கல்விக்கு கரையில்லை கற்பவர் நாட்சில
2. Failures are the pillars of success
   தோல்விகளே வெற்றியின் தூண்கள்
3. To err is human and forgive is divine
   மனிதன் பிழை விடுவது வழக்கம் அதனை மன்னிப்பது தெய்வீகம்
4. No pains no Gains
   முயற்சி திருவினையாக்கும்
5. Little drops of water make a mighty ocean
   சிறுதுளி பெருவெள்ளம்
6. The whole world is a stage men and women are mere players
   உலகமே ஒரு நாடக மேடை ஆண்களும் பெண்களும் நடிகர்கள்.
7. Live let live
   வாழு வாழவிடு
8. Truth always wins
   வாய்மையே வெல்லும்
9. Rome was not built in a day
   விடா முயற்சி பயனைத் தரும்
10. Patience is golden
    பொறுமையே செல்வம்
11. Life is a camera so heap on smile
    உள்ளம் அழுதாலும் உதடுகள் சிரிக்கட்டும்
12. The face is the index of the mind
    அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
13. Think twice before you speak
    கதைக்க முன்பு இருமுறை சிந்தி
14. Contentment is bliss
    போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
15. Time is gold
    நேரம் பொன்னானது
16. Too much of any things is god for nothing
    அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
17. Look before your laap
    ஆழமறியாமல் காலை விடாதே
18. The mills of God grind slow but sure
    அரசன் அன்று கொல்லும், இறைவன் நின்று கொல்வான்
19. Strike while the iron is hot Make hay while the sun shines
    காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
20. East or west, home is best
    எலி வளையானாலும் தனி வளை வேண்டும்

Rasalingam Mathurika
A/L 2009, Batch

### பூர்வ குழயிருப்புக்கள் – நாடுகள்

| | | |
|---|---|---|
| மரவீடு | - | பிலிப்பைன்ஸ் |
| புல்வீடு | - | கால்வாய் |
| பற்றைவீடு | - | அவுஸ்ரேலியா |
| மூங்கில்வீடு | - | கலிபோனியா |
| செங்கட்டிவீடு | - | சீனா |
| காகிதவீடு | - | ஜப்பான் |
| குகைவீடு | - | அமெரிக்கா |
| சுரங்கவீடு | - | சைபிரியா |
| பனிக்கட்டிவீடு | - | கிறின்லாந்து |
| குடிசைவீடு | - | வடஅமெரிக்கா |
| மரக்குற்றிவீடு | - | நியுகினியா |
| தாஜ்மகால் | - | இந்தியா, எகிப்து |
| சுதந்திரசிலை | - | அமெரிக்கா |
| மாபெரும்சுவர் | - | சீனா |
| சாய்ந்தகோபுரம் | - | இத்தாலி |
| தெங்குதோட்டம் | - | பபிலோனியா |

### உலக நாடுகளும் தேசிய சின்னங்களும்

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | - | தங்கத்தடி |
| அவுஸ்ரேலியா | - | கங்காரு |
| அயர்லாந்து | - | கட்ரக்மலர் |
| பிரான்ஸ் | - | அல்லிமலர் |
| பிரித்தானியா | - | ரோஜாமலர் |
| கனடா | - | வெள்ளைமலர் |
| டென்மார்க் | - | கடற்கரைச்செடி |
| இந்தியா | - | சிங்கத்தின்தலை |
| ஈரான் | - | ரோஜாமலர் |
| ஜப்பான் | - | கூட்டுப்புழு |
| பாகிஸ்தான் | - | பிறை |
| ஜேர்மனி | - | கோன்பூ |
| ஸ்பெயின் | - | கருடன் |
| அயர்லாந்து | - | இடல்விஸ்மலர் |
| பெல்சியம் | - | அசலியாமலர் |
| ருமேனியா | - | பூவரசம்பூ |
| எகிப்து | - | தாமரைப்பூ |
| சீனா | - | திராட்சைமலர் |
| போலந்து | - | சோலிமலர் |
| ஈராக் | - | சிவப்புரோஜா |

ச.டயானா
தரம்.9

## விஞ்ஞான பாடம் தொடர்பான சமன்பாடுகள்

### தரம் - 10

### பௌதீகவியல்

**அலகு 1**

விசை நேர்கோட்டியக்கம் ஆகியவற்றின் தொடர்புகளை வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பயன்படுத்தல்.

**கதி**

$$\text{கதி} = \frac{\text{இயங்கிய தூரம்}}{\text{நேரம்}} \quad \text{அலகு } ms^{-1}$$

**வேகம்**

$$\text{வேகம்} = \frac{\text{இடப்பெயர்ச்சி}}{\text{நேரம்}} \quad \text{அலகு } ms^{-1}$$

$$\text{ஆர்முடுகல்} = \frac{\text{இறுதி வேகம் - ஆரம்ப வேகம்}}{\text{நேரம்}}$$

$$\text{அலகு } \frac{ms^{-1}}{5} = ms^{-2}$$

**இயக்கம் தொடர்பான சமன்பாடுகள்**

| எண்ணிக் கணியம் | குறியீடு |
|---|---|
| நேரம் | t |
| தூரம் | d |
| இடப்பெயர்ச்சி | s |
| இறுதிவேகம் | v |
| ஆர்முடுகல் | a |
| திணிவு | m |
| நிறை | w |
| விசை | f |

முதலாம் இயக்க சமன்பாடு
$$v = u + at$$

இரண்டாம் இயக்க சமன்பாடு
$$s = \frac{(v+u)t}{2}$$

மூன்றாம் இயக்க சமன்பாடு
$$v^2 = u^2 + 2as$$

நான்காம் இயக்க சமன்பாடு
$$s = ut = \frac{1}{2} at^2$$

**நியூட்டனின் இரண்டாவது இயக்க விதி**

ஆரம்ப உந்தம் $= mu$

இறுதி உந்தம் $= mv$

உந்த மாற்றம் $= mv / mu = m(v-u)$

உந்த மாற்றத்துக்கு எடுத்த நேரம் $= t$

உந்த மாற்ற வீதம் $= \frac{m(v\ u)}{t}$

உந்த மாற்ற வீதம் = விசை = f

$f = \frac{m(v-u)}{t}$ ஆனால்,

$$a = \frac{v\ u}{t} = a$$

$$\boxed{F = ma}$$

**விசையின் நியம அலகு** N(நியூட்டன்)

**திரவ அமுக்கம்**

அடியின் பரப்பு $= A$

திரவத்தின் அடர்த்தி $= P - kg/m^3$

நீரின் உயரம் $= H\text{-}m$

ஆர்முடுகல் $= g\ ms^{-2}$/ புவியீர்ப்பின்

பாத்திரத்தினுள் நீரின் கனவளவு = அடிப்பரப்பளவு -xதிரவத்தின் உயரம்

$$\boxed{V = A\,h}$$

திரவத்தின் திணிவு = கனவளவு x அடர்த்தி

திரவத்தின் நிறை = கனவளவு x அடர்த்தி x ஈர்வையின் ஆர்முடுகல்
$= Ah \times p \times g$

பாத்திரத்தின் ஓரலகுப் பரப்பில் தாக்கும் விசை= $\frac{\text{விசை}}{\text{பரப்பு}}$

$= \frac{Ahpg}{A}$

$= heg$

திரவத்தில் ஏற்படும் அமுக்கம் = $\boxed{P = heg}$

உராய்வுக்குணகம்

F = உராய்வு விசை
R = செவ்வன் மறுதாக்கம்

$F = UR$ ( p/p என்பது மாறிலி)
விசைத் திருப்பம்

**அலகு 2**

பாயிகளின் மூலம் பொருட்களின் மீது ஏற்படுத்தப்படும் உதைப்புப் பற்றி அறிந்து கொள்ளல்.

**அமுக்கம்**

அமுக்கம் (P) = $\frac{\text{விசை (F)}}{\text{பரப்பளவு (A)}}$

அமுக்கத்தின் அலகு = $N / m^2$
பஸ்கால் (pa) எனும் சிறப்புப் பெயராலும் அழைக்கப்படும்.
$1NM^{-2} = 1pa$

**அலகு 3**

பொறிமுறைச் சக்தியை அன்றாட நடவடிக்கைகளில் பயன்படுத்தல்.

**வேலை**

வேலை = விசை x விசையின் திசையில் அசைந்த தூரம்

$W = F \times d$

வலு = $\frac{\text{வேலை}}{\text{நேரம்}}$

$P = \frac{w}{t}$

விசைத் திருப்பம் (M)
= விசை (F) x செங்குத்துத்தூரம் (d)

நியம அலகு Nm ஆகும்.

$M = F \times d$

வலுவின் நியம அலகு $JS^{-1}$ ஆகும்
வலுவின் சிறப்பலகு wc (உவாற்று)

**அழுத்த சக்தி**

பொருளை உயர்த்தத் தேவையான விசை = $m \times g$

வேலை = $mg \times h$
= $mgh$

அழுத்த சக்தி = $Ep = mgh$

$Ep = mgh$

**இயக்க சக்தி**

$E_k = \frac{1}{2} mv^2$

**எளிய பொறிகள்**

பொறிமுறை நயம் = $\frac{\text{சுமை}}{\text{எத்தனம்}}$

வேக விகிதம் = $\frac{\text{எத்தனப்புயநீளம்}}{\text{சுமைப்புயநீளம்}}$

பொறியின் திறன் = $\frac{\text{பொறிமுறைநயம்}}{\text{வேகவிகிதம்}} \times 100$

**அலகு 4**

வெப்ப சக்தியையும் வெப்ப இடமாற்றுகையையும் அளக்கும் முறைகளைப் பயன்படுத்தல்.

செல்சியஸ்சை பரனைட்டாக மாற்றுவதற்கான சூத்திரம்

$F = \frac{c \times g}{5} + 32$

பரனைற்றை செல்சியஸ்சாக மாற்றுவதற்கான சூத்திரம்

$C = (\frac{F\ 32}{9}) 5$

செல்சியஸ்சை கெல்வினுக்கு மாற்றுவதற்கு 273.5ஐ கூட்டுக.

**வெப்பக் கொள்ளளவு**

வெப்பக் கொள்ளளவு
= $\frac{\text{வெப்பத்தின் அளவு (H)}}{\text{வெப்பநிலைமாற்றம் (Q)}}$

வெப்பக் கொள்ளளவின் அலகு $J^{\cdot}\ C^{-1} / J1^{\cdot}\ C$
சர்வதேச அலகு $JK^{-1}$

தன்வெப்பக் கொள்ளளவின் அலகு
= $J/kg^{\cdot} C / Jkg^{-1} \cdot C^{-1}$

சர்வதேச அலகு $Jkg^{-1} \cdot k^{-1}$

**வெப்பம்**

வெப்பம் = MCQJ

**அலகு 5**

மின்னியல் தொடர்பான கோட்பாடுகளையும், தோற்றப்பாடுகளையும் அன்றாட வாழ்வில் பயன்படுத்தல்.

**மின்னோட்டம்**

மின்னோட்டம் = $\frac{\text{பாய்ந்த ஏற்றங்களின் அளவு}}{\text{நேரம்}}$

$I = \frac{Q}{T}$

அலகு = $CS^{-1}$ (A)

மின்னழுத்த வேறுபாடு = $\frac{\text{சக்தியின் அளவு}}{\text{ஏற்றங்களின் அளவு}}$

$V = \frac{W}{Q}$

ஓமின் விதி

அழுத்த வேறுபாடு= V    R = தடை அலகு

மின்னோட்டம் = R    V = அழுத்த வேறுபாடு

V a I    அலகு V

V = RI (R மாறிலி)    I = மின்னோட்டம்

அலகு Q

$$R = \frac{V}{I}$$

இணைக்கப்பட்ட தடையிகளின் சமவலுத்தடையை கணித்தல்.

தொடர்நிலையில் இணைக்கப்பட்ட தடைக்கான சமன்பாடு

$$R = R_1 + R_2 + R_3$$

சமாந்தரமாக இணைக்கப்பட்ட தடையின் சமவலுத்தடை

$$1/R = 1/R_1 + 1/R_2 + 1/R_3$$

**தரம் 11**

**பௌதிகவியல்**

**அலைகளும் அவற்றின் பயன்களும்**

அலையின் வேகம்

அலையின் வேகம் = V = Fr

F = மீடிறன்

r = அலை நீளம்

**அலகு 02**

ஒளியியலுடன் தொடர்புடைய தோற்றப்பாடுகள் படுகோணம் முறிகோணம் என்பவற்றுக்கிடையிலான முறிவுச்சுட்டி

முறிவுச்சுட்டி = $\frac{\text{படுகோணத்தின் சைன்}}{\text{முறிகோணத்தின் சைன்}}$

**வேகங்களுக்கான முறிவுச்சுட்டி**

முறிவுச்சுட்டி = $\frac{\text{வெற்றிடத்தில் வளியில் ஒளியின் வேகம்}}{\text{ஊடகத்தில் ஒளியின் வேகம்}}$

**ஆழத்துக்கான முறிவுச்சுட்டி**

முறிவுச்சுட்டி = $\frac{\text{உண்மை ஆழம்}}{\text{தோற்ற ஆழம்}}$

**அலகு 03**

**மின்னோட்டத்தின் விளைவுகள்**

பிறப்பிக்கப்படும் வெப்பசக்தி

$$VIt = I^2Rt = \frac{V^2}{R}t \text{ (யூல்)}$$

**வோல்ற்றளவுக்கிடையிலான தொடர்பு**

$\frac{\text{துணைச்சுற்று வோல்ற்றளவு}}{\text{முதற்சுற்று வோல்ற்றளவு}} = \frac{\text{துணைச்சுற்றுஎண்ணிக்கை}}{\text{முதற்சுற்று எண்ணிக்கை}}$

**இரசாயனவியல்**

**அலகு 1**

வாயுக்களின் நடத்தையைப் பாதிக்கும் காரணிகளும் வாயுக்களின் நடத்தைக் கோலங்களும்.

**போயிலின் விதி**

மாறா வெப்பநிலையில் குறித்த திணிவுள்ள வாயுவின் கனவளவு அதன் அமுக்கத்திற்கு நேர்மாறு

**சாள்ஸ்சின் விதி**

மாறா அமுக்கத்தில் குறித்த திணிவுடைய வாயுவின் கனவளவு அதன் தனி வெப்பநிலைக்கு நேர் விகிதசமனாகும்.

V    T

$$\frac{V_1}{T_1} = \frac{V_2}{T_2}$$

**தேவைக்கேற்ப கரைசலைத் தயாரித்தல்**

01. **கரைசலின் அமைப்பை திணிவு** - திணிவு 100% இல் கூறுதல்

கரைசலின் அமைப்பு 100g கரைசலில் கரைந்துள்ள கரையத்தின் திணிவு 100 இல் குறிப்பிடப்படுகின்றது.

(W/W%)

$$\text{திணிவு (100\%)} = \frac{\text{கரையத்தின் திணிவு}}{\text{கரைசலின் திணிவு}} \times 100$$

02. கரைசலின் அமைப்பை அரைப் பகுதியை மற்றைய கொலத்தில் போட்டு பின்கோடிட்டு பொதுஅறிவுப் பகுதியை கீழ் இடுக. கனவளவு - கனவளவு 100% இல் கூறுதல்

கனவளவு கனவளவு 100%அமைப்பு என்பது $100cm^3$ (100ml) கரைசலில் கரைந்துள்ள கரையத்தின் கனவாகும்.

கனவளவு கனவளவு 100%

$$= \frac{\text{கரையத்தின் கனவளவு}}{\text{கரைசலின் கனவளவு}} \times 100$$

03. கரைசலின் அமைப்பை திணிவு கனவளவு 100% குறிப்பிடுதல்

இங்கு $100cm^3$ கரைசலில் கரைந்துள்ள கரையத்தின் திணிவு குறிப்பிடப்படுகின்றது.

திணிவு கனவளவு 100%

$$= \frac{\text{கரையத்தின் திணிவு}}{\text{கரைசலின் கனவளவு}} \times 100$$

04. கரைசலின் அமைப்பை மூல் - கனவளவு வீதத்தில் குறிப்பிடல்

$$\text{கரைசலின் அமைப்பு} = \frac{\text{கரையத்தின்மூல்}}{\text{கரைசலின் கனவளவு}}$$

ஆக்கம் சு. ரேகி
தரம்: 11

## பொது அறிவு

1. மனித மூளையின் அளவு என்ன?
   8அங்குல நீளம், 6அங்குல அகலம்
   4அங்குல தடிப்பு.Length 15cm
2. விசர் நாய் கடித்தால் போடும் ஊசி என்ன?
   ARB எனப்படுகிறது.
3. குளிர்சாதனப்பெட்டியினுள் இருக்கும் வாயு எது?
   அமோனியம் [CFC]
4. உலக எயிட்ஸ் தினம்?
   டிசம்பர்-1
5. தமிழ் நாடகத்தின் தந்தை யார்?
   பம்பல் சம்மந்த முதலியார்.
6. மருத்துவத்தின் தந்தை யார்?
   கிப்போகிரட்டீஸ்.
7. யாழ்ப்பாணத்தில் பாயும் ஆறு எது?
   வழுக்கியாறு.
8. இந்தோனேசியாவின் நாணயத்தின் மறுபெயர் யாது?
   ரூபியா [Rupiah]
9. சதுரங்க விளையாட்டின் தாயகம் எது?
   இந்தியா.
10. அதிகளவு ஒஸ்கார் விருது பெற்றவர்?
    வாலட்டிஸ்னி [கார்டுன் படங்களை தயாரித்தவர்.]
11. உலக வங்கியின் தலைவர் யார்?
    ஜேமஸ் வுல்வென்சன்.
12. 11வது சர்வதேச் எயிட்ஸ் மாநாடு நடைபெற்ற நாடு எது?
    கனடா [வன்சயன்]
13. தங்கத்தாத்தா என அழைக்கப்படுபவர் யார்?
    நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.
14. உலகப் புகழ் பெற்ற நாவலான தாய் என்ன?
    மக்சிம்கோர்க்கி.
15. 8வது சர்வதேசவிளையாட்டுப் போட்டி நடைபெற்ற இடம் எது?
    நேபாளம் [கத்மண்டு]
16. முதலாவது அணுகுண்டு தயாரித்த ஆய்வுகூடம் எது?
    அல்பிரட் நோபால்
17. கிரிக்கெட் மட்டை(BM)செய்யப் பயன்படும் மரம் ?
    வில்லோமரம்
18. இரண்டாம் உலகப்போரின் போது கூடுதலாகப் பயன்படுத்தப்பட்ட விசவாயு எது?
    அமோனியம்வாயு
19. ஒரு நிமிடத்தில் ஒரு மனிதனின் இதயம் எத்தனை போதல் குருதியை உடலினுள் செலுத்துகிறது?
    7.5போத்தல்
20. 1999 இல் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் 2ம்இடம் பெற்ற நாடு எது ?
    பாகிஷ்தான்

ர:யசித்திரா
தரம்:09

**சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ் மாவட்ட சிறுவர் இல்லங்களுக்கிடையில் இடம் பெற்ற கவிதைப் போட்டியில் மேற்பிரிவில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற கவிதைகள்.**

## பிள்ளைகளின் தேடல் பசிக்கு செவிசாய்த்து போடுவோம்

நட்சத்திர பூக்களாய் நலிந்து கிடக்கும்
மென்மையின் தேடலை நோக்கி
இளந்தளிர்களின் தேடலுக்கு விடை கொடுங்கள்
இனிமையான மழலைப் பேச்சுக்கு செவிசாய்த்து
அவர்களின் குறுகிய உலகில் வீறுநடை
போட்டிடச் செய்திடுங்கள்
புதிதாய் நம்பிக்கை தருவதாய்
ஒரு சொல்லை எதிர்பார்க்கும் தாரகைகளிடம்
தாமதிக்காமல் செவிசாயுங்கள்
மானிடப் பரப்பில் அவர்களுக்கும்

இறக்கை கொடுத்து பறக்க விடுங்கள்
செவ்வந்திப்பூ சிதறுபட்டதாயும்
அழகான முத்திரைகளாய் இருக்கும் - நிலாக்களிடம்
இவர்களை செல்லவிடுங்கள்
மானிடப் பரப்பில் பறந்திடும்
வெண்புறாக்களிடம்
பஞ்சமா பாதங்களை எண்ணாத அறியாத
எதிர்கால சத்தியவான்களிடம்
கனிந்து அவர்களை நோக்கி......
குழந்தை நிலாக்கள் என்றதும்
வண்ண வண்ணமாக சிறகடிக்கும்
வண்ணாத்திகளுக்கு சிறகடிக்க
ஒன்று திரண்டு ஒக்டோபர் ஒன்றில் இல் முன்வருவோம்.

வி.விஜயதர்சினி
தரம் 11
(முதலாமிடம்)

## பிள்ளைகளுக்குச் செவிசாய்ப்பதன் மூலம் அவர்களது உலகை மகிழ்ச்சியான தாக்குவோம்

சிறுவர்களே!
கனவுகளோடும் ! கற்பனைகளோடும்!
பிரசவமான மங்கள புஷ்பங்கள்!
நாளைய உலகின் தலைவர்கள்!

காற்றிலே கலந்து வரும் - சிறுவர்கள்
கருத்திற்கு தடைகள் போடாதீர்கள்
இதயத்தில் பிரசவிக்கும் - இவர்கள்
இன்பங்கள் ரணமாக்காதீர்கள்
சிறுவர்கள் சீரிய சிந்தனையாளர்கள்
சிறந்த உலகிற்கு சிற்பிகள்!

விதைகள் விருட்சமானால் - ஆம்
நிழல் கொடுக்கும் - எனவே
விதைகளின் மகிழ்ச்சிக்கு எல்லைபோடாதீர்கள்!
இவர்கள் கருத்திற்கு காது கொடுங்கள்
கவலைகளைத் தட்டிக் கேளுங்கள் - ஆதரவோடு
அறிவையும் அன்பையும் போதியுங்கள்

எரிந்து விழும் சமுதாயத்திலும் - வெந்து
சாம்பலாகும் சிறுவர்களுக்கு
நிழல் கொடுக்கும் விருட்சங்களும் பல
இருக்கத்தான் செய்கின்றன இறுதி வரை.......

ரா.ரஜீவனா
உயர்தரம் 2010
(இரண்டாமிடம்)



## சில அங்கிகளும் அவற்றின் இருசொற் பெயரீடுகளும்

**மீன்கள்**

01. அசோக கொண்டை - Pantius asaka
(பன்றியஸ் அசோக்கா)
02. புலத் ஹப்பயா - Pantius nigrafasciatus
(பன்றியால் நிக்ரோபசியாற்றசு)
03. கினமஹ - Scorpaena valitans
(இசுக்கோப்னோ வொலிரன்ஸ்)
04. லபுகிரவா - Scarpas pepo
(இசுக்காபுசு பெப்போ)
05. மல்புலுட்டா - Malpulutta kretseri
(மல்புலுட்டா கிரேட் செறி)

**பறவைகள்**

01. மாம்பழக்குருவி - Orilus xanthornus
(ஒரியயோலுசு சான்தோனுசு)
02. கெஹிபெல்லா - Urocissa ornate
(யூரோசிகா ஒர்னாற்றா)
03. நாகணவாய் - Graculareli giosa
(கிரகயோவா ரெலிஜியோசா)
04. மயில் - Pavo cristatus
(பாவோ கிரிசுற்றாற்றசு)
05. காட்டுக்கோழி - Gallus lafayetli
(கில்லுசு ல∴பாபெற்றி)

**ஊர்வன**

01. இராட்சத ஆமை - Geo chelone elephantopus
(ஜிபோ கெலோனே எலிபன்டோபஸ்)
02. முதலை - Crocody lus palustris
(குரொக்கடை லசு பலுசிற்றசு)
03. வளைய வீரியன் - Bangarus ceylonicus
(பங்காருசு சிலோனிக்கசு)
04. நாகம் - Naya noya
(நாஜா நாஜா)
05. நட்சத்திர ஆமை - Testudo elegans
(ரெசுற்றுடோ எலிகன்சு)

**முலையூட்டிகள்**

01. யானை - Elephas maximus
(எலி∴பசு மக்சிமசு)
02. சிங்கம் - Pantera leo (பந்தேரா லியோ)
03. குரங்கு - Semnopithecus entellus
(செம்னொமதேக்குசு எக்ரெலுசு)
04. புள்ளிமான் - Axis axis (அக்சிசு அக்சிசு)

**தாவரங்கள்**

01. உள்ளி - Allias sativam
(அலியம் சற்றைவம்)
02. தேயிலை - Camalia sinesis
(கமிலியா சைனென்சிஸ்)
03. பப்பாசி - Carica papaya
(கரிக்கா பப்பாயா)
04. நெல் - Oryza sative
(ஒறைசா சற்றவைா)
05. வெற்றிலை - Piper betle
(பைப்பர் பீற்றாஸ்)

வி.அஜித்
தரம்- 11

**நான் ஒரு பறவையானால்.......**

- நான் ஒரு பறவையானால் எவ்வளவு உயரம் வேண்டுமானாலும் பறப்பேன்.
- என்னைக் காப்பாற்ற யாரும் தேவையில்லை.
- பல இடங்களுக்குச் செல்வேன்.
- எனக்கு விருப்பமான இடத்தில் அழகான ஓர் வீடு அமைப்பேன்
- பல வகையான பழங்களை இறைவனின் கொடை என நினைத்து உண்பேன்.
- இயற்கை அன்னையின் எழிலைக் கண்டு களிப்பேன்.
- பல நண்பர்களுடன் பாடிக் கூடித் திரிவேன்.
- பல இனப் பறவைகளுடன் சுற்றித் திரிவேன்.
- ஆறு, கடல், குளம் எனப் பலவற்றுக்குள் நீந்தி என்னைச் சுத்தம் செய்வேன்.
- வெளிநாடு செல்ல வேண்டுமென எனது நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றுவேன.

ஜெ.ஜெதுஷா
தரம் - 02

## செல்வத்தின் பேராசை

ஒரு மடத்தில் ஒரு துறவி இருந்தார் அவர் பெயர் வைஷ்ணவி. அவர் செல்வந்தரிடம் தினமும் சென்று அவரைப் புகழ்ந்து விலையுயர்ந்த பரிசில்கள் பெற்றுக் கொள்வார் பின் அதனை இரு மடங்கு பணம் கூட்டி விற்று நிறையப்பணம் சேமித்து வந்தார். இப்படி சேமித்து ரூபா பத்து இலட்சம் கையில் இருந்தது. இவள் யாரிடத்திலும் நம்பிக்கையற்று தானே கொண்டு செல்வார் இவரின் விபரத்தை அறிந்து கஜானி இவளின் பணத்தைக் கவரத் திட்டம் தீட்டினாள்.

வைஷ்ணவி இருந்த மடத்தில் களவெடுக்க முடியாது. எனவே அவளின் சிறந்த இருந்து பணத்தைப் பெற வேண்டும் என எண்ணினார். பின் அவரிடம் சென்று தாயே, எனது குடும்பம் வறிய குடும்பம் நீங்கள் என்னை சிறந்த மாணவியாக ஏற்றுக் கொள்வீர்களா? என்று மனம் உடைந்து பதைபதைத்து கண்ணீர் சிந்தினாள். அவள் மனமிரங்கி ஏற்றுக்கொண்டாள்.

அவள் உனக்கு பூப்பறித்து இறைவனுக்கு சாற்றுதல், விசேட தினங்களில் மாலைகட்டிப் போடுதல் உன் வேலை மாதக் கட்டணம் ரூபா 50 என்றாள். தாயே, எனது குடும்பம் வறிய குடும்பத்திற்கு 50/- பற்றாது தயவு செய்து எனது பணத்தைக் கூட்டித் தருமாறு கேட்டாள். சரி பார்ப்போம், போய்த்தூங்கு என்று மடத்தில் ஒரு இடத்தையும் ஒதுக்கிக் கொடுத்தார். ஒரு மாதம் வந்ததும் நான் நேரம் இருக்கும் பொழுது பணத்தைப் பெற்றுக் கொள்கின்றேன் என்று கூறினாள். சரி என்று வைஷ்ணவி தூங்கச் சென்றார். கஜானி யோசித்தாள் தூக்கத்தில் இருக்கும் போது பணத்தைக் கவரலாம் என்று. தூக்கத்தில் இருந்த வைஷ்ணவியிடம் பணத்தைக் கேட்டாள். அவளோ தனது பத்து இலட்சம் ரூபாயில் எட்டு இலட்சம் ரூபாயை கஜானியிடம் கொடுத்தாள். இவளுக்கு பெரும் மகிழ்ச்சி அந்தப் பணத்துடன் தனது வீட்டுக்குச் சென்று தாயிடம் நடந்தவற்றைக் கூறினாள்.

வைஷ்ணவி நித்திரை விட்டு எழுந்த போது தன்னில் ஏதோ பாரம் குறைந்தது மாதிரி இருந்தது. தனது பணப்பையைத் திறந்து பார்த்தபோது அதில் பணம் குறைவாக இருந்தது. இவளுக்கு கஜானியின் திட்டம் விளங்கியது. உடனே அவளின் விபரம் அறிய தனது பக்கத்து வீட்டில் போய்க் கேட்டார். பக்கத்து வீட்டுக்காரி அவளின் ஊர் தானக்கு தெரியும் என்று கூறினாள். பின் அவளது ஊரைச்சென்றடைந்ததும் அவளின் வீடு தேடி சென்றும் நான் உன்னிடம் நம்பிக்கை வைத்திருக்கக் கூடாது நீ உண்மையாகவே பணம் கவர வந்தாயோ? வேலை தான் செய்ய வந்தாயோ? மரியாதையுடன் கவர்ந்த பணத்தைக் கொண்டுவா என்று கேட்டாள்.

அவள் செலவளித்ததாகப் பொய் கூறினாள். ஆனால் வைஷ்ணவி விடுவதாக இல்லை. ஊர்ப் பெரியார்களிடம் சென்று நடந்தவற்றைக் கூறினாள். கஜானியிடமிருந்து பணத்தைப் பெற்று வைஷ்ணவியிடம் அவர்கள் கொடுத்தார்கள். கஜானியை ஊரைவிட்டும் தீதுரத்திவிட்டார்கள். பேராசை பெருநட்டம்.

ரா.அறிவழகி

தரம் 07

## பழமொழிகள்

- அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
- அடாது செய்பவன் படாது படுவான்
- அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
- அவனின்றி அணுவும் அசையாது
- அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
- அற்ப ஆசை கோடி தரித்திரம்
- அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம்
- ஆழமறியாது காலை விடாதே
- இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை
- இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
- எறும்பு ஊறக் கல்லும் தேயும்
- கேள்விச் செவியன் ஊரைக் கெடுப்பான்
- பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்
- கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்
- ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
- கடுகு சிறிதானாலும் காரம் பெரிது
- காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு
- சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்
- தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்
- ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒருகாலம்
- ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குகொண்டாட்டம்
- கண்ணின் குற்றம் கண்ணுக்கு தெரியாது
- கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளில் தெரியும்
- நிழலின் அருமை வெயிலில் தெரியும்
- அழுத பிள்ளை பால் குடிக்கும்

க.சரண்யா

தரம் - 6

## வானவில்லை வாழ்த்துகிறேன்

அன்பான வானவில்லே வாழ்த்துகிறேன் - உன்னை
உன்னை அணைக்காமல் ஒரு வெள்ளி போகாது
வானவில்லே உன் ஆக்கங்கள் கவர்ந்துள்ளது
என்னை

ஆரம்பத்தில் அசத்தலான சாராம்சம்
புரட்டினால் சிந்திக்க ஆன்மீகம்
கீழே கவிதைகள் என் பேனைக்கு மை விடுகிறது.
தட்டினால் எக்ஸ்ரே ரிப்போட அரசியலை
மதியூகி நடந்ததை கட்டுரையாய்த் தருகிறார்

அடுத்ததாக எதிர்கால ராசிக் குணங்கள்
இன்னொருவர் பார்வையில் முக்கியச் செய்திகள்
மலையகத்தை முன்நிறுத்தும் மலையக அவலம்
சிறுவருக்கு விருந்தளிக்கும் வானவில்லே
வானவில்லே உன்னை வாழ்த்துகிறேன்.

நி.ஜீவினி
தரம் - 7

## அன்னை

பத்து மாதம் சுமந்து எம்மைப்
பாரினிலே பெற்றெடுத்தவள் அன்னை
நித்தமும் தாலாட்டி எம்மை
நித்திரை யாக்கினாள் அன்னை
முத்தங்கள் பல தந்து எம்மை
முகம் மலரச் செய்வாள் அன்னை
வித்தைகள் பயிற்றுவித்து எம்மை
விளையாட வைப்பாள் அன்னை
சத்திய வழியிலே எம்மை
சென்றிட வழி காட்டியவள் அன்னை
இத்தனையும் செய்தே எம்மை
இன்புறச் செய்வாள் எம் அன்னை

செ.பிரசாந்
தரம் - 06

## ஔவைப்பாட்டி

ஆத்திசூடி அளித்தவராம்
அறநெறி பலவும் உரைத்தவராம்
தோத்திரப் பாடல் சென்னவராம்
தொண்டுக் கிழவி ஔவையடி!

பாலமுருகனைப் பார்த்தவராம்
பாடல்கள் சொல்லிப் பணிந்தவராம்
சீலம் மிக வாழ்ந்தவராம்
செந்தமிழ்க் கிழவி ஔவையடி!

கூழைச் சுவைத்துக் குடித்தவராம்
குடிசைகள் சுற்றி வந்தவராம்
ஏழைகள் வீட்டில் இருந்தவராம்
இன் கவிக் கிழவி ஔவையடி!

ஔவையார் பலர் எனச் சொல்லுவதே!
அதனால் என்ன இருக்கட்டுமே!
ஔவையார் சொன்னவை அறவழியே!
அவ்வழி சென்றே நலம் அடைவோம்!

இ.ஜெகதீபன்
தரம் - 03

## பயணம்



உயிர் உடலுடன்
உறவாடும் காலமதில்
உன்னதப் பருவம்
மாணவப் பருவமதில்
இலட்சிய ஊராரோடு
தமிழ் தேசம் எமதென
தமிழ் எம் தாயென
தமிழை வாழவைக்க
எம் இனம் தலை நிமிர
உலகதனில் எம்மொழி ஓங்க
உண்மை தமிழ்ப் பற்றோடு
எம்மலர்வு தமிழுக்கு
புதுப் பிறப்பென
திசை மாறாச் சிட்டுக்களாய்
சிறகடித்திடுவோம்.

லோ.வாகினி
தரம் - 10

## திருக்குறள்



இரண்டு வரியால் ஆனதுவாம்
இனிக்கும் நல்ல வார்த்தைகளாம்
திரண்ட கருத்தை உடையதுவாம்
திருக்குறள் நூலைப் படிப்பீரே
முத்தமிழ் இலக்கிய மணிமுடியாம்
முப்பால் தன்னை உடையதுவாம்
புத்தியில் கொண்டு படிப்பவர்க்கே
புதுப்புது நயங்கள் தோன்றிடுமாம்

உலகப் பொதுமறை எனப்படுமாம்
உயரிய நெறிகளை உரைத்திடுமாம்
பலரும் படித்துப் பயன்பெறலாம்
பாரினில் மேன்மைகள் அடைந்திடலாம்

பற்பல மொழிகளில் வந்ததுவாம்
பண்பையும் அன்பையும் சொல்லுவதாம்
கற்றிடக் கற்றிடத் தெளிவதுவாம்
கடமையை விளக்கிச் சொல்லுவதாம்

புலவர்கள் பலரும் போற்றியதாம்
புவனம் எங்கும் அறிந்ததுவாம்
நிலவும் சுடரும் நிலைத்தது போல்
நிலைத்து நின்று நிலவுவதாம்

புள்ளியில் படிக்கும் பாலர்களே
எங்கள் நாட்டின் சீலர்களே
வள்ளுவர் வழியில் நின்றிடுவீர்!
வாழ்வில் ஒளியைப் பெற்றிடுவீர்

ம.மதுஷன்
தரம் - 06

## உங்களோடு சில நிமிடம்

அன்புள்ளங்களே!
எதற்காக வேதனைகளைக் கண்டு
துன்பப்படுகிறீர்கள்?
உள்ளங்களே!
இன்று வேதனைகளைச் சுமந்தால் ....
நாளை சாதனையாளர்களாகலாம்
இன்று சுமைகளைச் சுமந்தால்
நாளை சுகமாக வாழலாம்
தோழர்களே!
இப்பொழுது முள்ளின் மேல் படுத்திருப்பது
துன்பமாக வலிக்கிறதா?
கவலையைக் காற்றில்பறக்க விடுங்கள்
நாளை ரோஜா மீது தூங்கலாம்
ஒவ்வொரு வேதனையிலும்!
ஒவ்வொரு சோதனையிலும்!
ஒவ்வொரு சாதனையுள்ளது................
புரிகிறதா?

ரா.ரஜீந்தினி
தரம் - 09

## உணர்வுகளின் உறைவிடம்

இன்று என் உள்ளம்
ஒரு புதைகுழிதான்
ஏனெனில் .................
அங்கு தான் என் ஆசைகள்
அனைத்தும் புதைக்கப்படுகின்றன.
இன்று என் இதயம்
ஒரு சுமை தாங்கிதான்
ஏனெனில் .................
அங்கு தான் என் சோகங்கள்
அனைத்தும் சேர்க்கப்படுகின்றன
இன்று என் கண்கள்
ஒரு ஊற்றுக் கிணறு தான்
ஏனெனில் .................
அங்கு தான் என் வேதனைகள்
கண்ணீராக ஊற்றெடுக்கின்றன
இன்று என் கவிதைகள்
ஒரு காவியம் தான்
ஏனெனில் .................
அங்கு தான் என் வாழ்வின்
வரிகள் அலங்கரிக்கப்படுகின்றன

ரா.ரஜீந்தினி
தரம் - 09

## படிக்க வேண்டும்

படிக்க வேண்டும் தம்பி - பாடம்
படிக்க வேண்டும் தம்பி
படிக்கப் படிக்க உயர்வாய் நீ
படிக்கா விட்டால் தாழ்வே

பள்ளியிலும் படிப்பாய் - பல
பத்திரிகையும் படிப்பாய்
துள்ளித் திரியும் வயதில் - வரும்
சோம்பல் உன்னைக் கெடுக்கும்

புத்தகங்கள் படிப்பாய் - நல்ல
புதினங்களும் படிப்பாய்
சித்திரங்கள் நிறைந்த பல
சிறுவர் கதை படிப்பாய்

நூலகங்கள் சென்று நல்ல
நூல்களையே தேடி,
பாலகனே நீயும் - அங்கு
படித்தால் மிக நன்றாம்

ம.விதுர்சன்
தரம் - 04

கவிதைகள்

## ஆசானே

அறிவின் வடிவமாய்
ஆண்டவனின் வடிவமாய்
அன்பின் உறைவிடமாய்
வந்தீர் எமக்காகவே!

அறிவினை ஊட்டி
திடமான பல கருத்துக்கள் கூறி
பாரிலில் சிறந்திட
திறமைகள் எமக்கூட்டினீரே!

அன்பே வடிவெடுத்து
"அ" என்ற சொல் எடுத்து
கல்வி என்னும் படகேற்றி
கடமை உணர்வை ஊட்டினீரே!

சிறப்பான வாழ்க்கைக்கு,
சீரும் சிறப்புடன் வாழ வைத்தீர்
ஆசானே, புகழ்மாலை சூடிடுவேன்
புதுமைகள் பல செய்திடுவேன்

ம.ஜீவிதா
தரம் 08

## பொது அறிவு

1. மிக நீளமான தேசிய கீதத்தைக் கொண்ட நாடு?
   பிறேசில்
2. அண்மையில் நர்க்கீஸ் சூறாவளியால் பாதிக்கப்பட்ட நாடு? மியன்மார்
3. இவ்வருடம் சார்க் உச்சி மாநாடு நடைபெறவுள்ள நாடு?
   இலங்கை
4. நின்று கொண்டு உறங்கும் மிருகம்? ஒட்டகச் சிவிங்கி
5. தூங்காத பறவை எது? புறா
6. அண்மையில் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்ட உயரமான சிகரம் எது? எவரெஸ்ட்
7. 9ஆம் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் கோப்பையை வென்ற நாடு? இலங்கை
8. உலக வெப்பமயமாதல் தொடர்பான மாநாடு நடைபெற்ற இடம்? பாலுத்தீவு
9. பன்னிரண்டு மொழிகளில் பாடும் திறமை பெற்றவர்? L.R.ஈஸ்வரி
10. மிகக் குறைந்தளவான தேசிய கீதத்தைக் கொண்ட நாடு? யப்பான் (4வரி)

ப.தமிழ்நிலா
தரம் - 6

## விண்வெளித் தொழில்நுட்பம்

- ஐக்கிய நாடுகள் சபை 1992ம் ஆண்டைச் சர்வதேச விண்வெளி ஆண்டு எனப் பிரகடனப் படுத்தப்பட்டது.
- ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொறுப்பாக உள்ள நிறுவனம் - நாஸா
- விண்வெளியை முதன்முதலில் வலம் வந்தவர் யூரிகாரின் முன்னாள் சோவியத் ஒன்றியத்தை சேர்ந்த இவர் 1961இல் நிகழ்த்தினார்.
- ஹேலீஸ் என்னும் வால் வெள்ளி 76 ஆண்டுகளுக்கு ஓர் முறை பூமிக்கு அண்மையாக தோன்றுகிறது. இறுதியாக 1936இல் தோன்றியது.
- விண்வெளிக்கு 1963ல் சென்ற முதல் பெண்மணி வலென்ரினா டெரஸ்கோப்
- 1996ல் பூமிக்கு அண்மையில் தோன்றிய வால் நட்சத்திரம் - கியாகுடாவே இதனை ஜப்பானிய விஞ்ஞானி கண்டறிந்தார்.
- 1957ஆம் ஆண்டு விண்வெளிக்குச் சென்ற முதலாவது உயிரினம் லைகா.
- 1969 July 20இல் அமெரிக்காவால் அனுப்பிய அப்பலோ 11 என்னும் விண்வெளி ஓடத்தில் நீல் ஆம்ஸ்றோஸ் எட்வின், அல்ட்ரின் மைக்கல் கொலின்ஸ் ஆகியோர் பயணம் செய்தனர்.
- ஞாயிற்றுத் தொகுதியின் மிகப் பெரிய கோள் - வியாழன் இக்கோளுடன் 1994 ஏப்பிரலில் சூமேக்கர் லெவி 9 எனும் வால்வெள்ளி 21 துண்டுகளாக மோதி உடைந்தது. இவ் வால் வெள்ளியை சூமேக்கர் தம்பதியினரும் லெவி என்ற உறவினரும் கண்டறிந்தனர்.
- விண்வெளிக்கு சென்ற முதல் பெண்மணி விஸ்லாவா சிம்போர்ஸ்கா

நா. பிரசாந்
தரம் - 06

## முதலாவது விண்வெளிச் சுற்றுலாப் பயணி

* விண்ணிலே சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் விந்தை விஞ்ஞானத்தின் முன்னேற்றப் படிகளில் ஒன்றாகும்.
* விண்வெளியில் முதல் சுற்றுப்பயணம் 2001 ஏப்ரல் 28இல் நடைபெற்றது.
* முதலாவது விண்வெளி சுற்றுலாப் பயணியாகப் பேறு பெற்றவர் டெனிஸ் டிட்டோ ஆவார்.
* இப்பயணத்தை மேற்கொண்ட விண்கலம் சோயிஸ் விண்கலம். இது கசாஸ்கானில் இருந்து புறப்பட்டது.
* இந்த விண்பயணத்திற்கு டிட்டோ செலுத்திய பணம் சுமார் 20 மில்லியன் டொலர்களாகும்
* விண்பயணி ஒருவருக்கும் சாதாரணமாக விண்வெளி வீரர்களுக்கு வழங்கப்படும் எல்லாப் பயிற்சிகளும் வழங்கப்பட்டது.

வி. இலிங்கேஸ்வரன்
தரம் - 11

## தெரிந்து கொள்ளுங்கள்

**உலகின் பெரிய பாலை வனங்கள் அமைந்துள்ள நாடுகள் பரப்பளவு (சதுர மைல்)**

- சகாரா வடஆபிரிக்கா 3500,000
- கோபி மங்கோலியா சீனா 500,000
- படகோனியா தெற்கு ஆர்ஜென்டீனா 300,000
- லெஹாரி தென்னாபிரிக்கா 225,000
- சிரேட்சாண்டி மேற்கு அவுஸ்திரேலியா 150,000
- சிஹீவாஹிவான் - மெக்சிக்கோ 140,000
- தக்லிமாகன் - சீனா 140,000
- கராகும் - துருக்மேனிஸ்தான் - 120,000
- தார் - இந்தியா 100,000
- கிஸில்கும் - கஜகஸ்தான் - உஸ்பெகிஸ்தான் - 100,000

**உலகின் உயரமான சிகரங்கள் அமைந்துள்ள நாடுகள் உயரம் (அடி)**

- எவரெஸ்ற் - நேபாளம் - திபெத் 29.028
- காட்வின் - ஆஸ்டின் - இந்தியா - 28.250
- கஞ்சன்ஜங்கா - இந்தியா நேபாளம் - 28.208
- மகாலு நேபாளம் - திபெத் - 27.824
- தவளகிரி நேபாளம் - 26.810
- மெக்கன்லி அமெரிக்கா 20.320
- அக்கோனாக்குவா தான்சானியா 19.340
- மெயின்பிளாங் - பிரான்ஸ் - இத்தாலி 15.771
- வின்சன் மாஸில் - அண்டார்டிகா 16.867
- குக் - நியூசிலாந்து 12.340

செ.சாயுகாந்

## உலகில் மிகப் பெரியவை

| | |
|---|---|
| உலகில் மிகப்பெரிய கடல் | - தென்சீனக்கடல். |
| உலகில் மிகப்பெரிய சமுத்திரம் | - பசுபிக்சமுத்திரம். |
| உலகில் மிகப்பெரிய கண்டம் | - ஆசியாக்கண்டம். |
| உலகில் மிகப்பெரிய ஆறு | - அமேசன் ஆறு. |
| உலகில் மிகப்பெரிய தீவு | - கிறீன்லாந்து. |
| உலகில் மிகப்பெரிய பூங்கா | - உப்பபீபல்லோ. |
| உலகில் மிகப்பெரிய பாலைவனம் | - சகாரா |
| உலகில் மிகப்பெரிய விமானம் | - 777ஜெட் விமானம். |
| உலகில் மிகப்பெரிய உப்புநீர் ஏரி | - கஸ்பியன் கோய்மோர் ஏரி |
| உலகில் மிகப்பெரிய நூதனசாலை | -மியூசியம் ஓப்நெச்சூரல் கில்ட்பா |
| உலகில் பெரிய விரிகுடா | - கட்சன் விரிகுடா |

ந.லக்சாயினி
தரம்.

## மாதங்களின் பெயர் வந்த கதை

**ஜனவரி :** சொர்க்கத்தின் வாயிற்காப்போனாகிய *Janus* என்பவரின் பெயரால் அழைக்கப்படுகிறது.

**பெப்ரவரி :** பாவங்களுக்கு பரிகாரம் தேடும் காலத்தை பெப்ருவாலியா *(Februalia)* என்பர். எனவே அப்பெயரால் அழைக்கப்படுகிறது.

**மார்ச் :** யுத்த தேவதையான மார்ஸ் *(Mars)* என்பவரின் பெயரால் அழைக்கப்படுகிறது.

**ஏப்ரல் :** அப்பிறிரே *(Aperire)* என்ற லத்தின் வார்த்தை அதன் அர்த்தம் - மலர் அரும்புதல்

**மே :** தாவரங்களை வளர வைக்கும் தேவதையான மேய்யா *(Maia)* வின் பெயரால் அழைக்கப்படுகிறது.

**ஜூன் : ஜுவனீஸ்** *(Juvenis)*

**ஜுலை :** யூலியர்சீஸிரின் பெயரால் அழைக்கப்படுகிறது.

**ஆகஸ்ட் :** 1வது ரோமானியச் சக்கரவர்த்தி ஆகஸ்தஸ்சின் *(Augustus)* பெயரினால்அழைக்கப்படுகிறது.

**செப்ரெம்பர் :** லத்தின் வார்த்தையே செப்ரம் *(Septem)* அர்த்தம் - ஏழு

**ஒக்ரோபர் :** லத்தீன் வார்த்தையான ஒக்ரோ *(Octo)* அதன் அர்த்தம் - எட்டு

**நவம்பர் :** லத்தீன் வார்த்தையான நவம் *(Novem)* அதன் அர்த்தம் - ஒன்பது

**டிசம்பர் :** லத்தீன் வார்த்தையான டிசம் *(Decem)* அதன் அர்த்தம் - பத்து

ச.பிருந்தா
தரம் - 8

## சிறுவர் உரிமைகள்

ஆரம்பக்கல்வியைக் கட்டாயமாகவும் இலவசமாகவும் கற்றல்
ஓய்வு நேரத்தைச் சிறப்பாகக் கழித்தல்
பொழுது போக்குகளில் ஈடுபடல்
பாகுபாடுகளிலிருந்து பாதுகாப்புப்பெறல்.
விரும்பிய கல்வியைப் பெறல்.
சங்கங்களில் அங்கத்துவம் வகித்தல்
விரும்பிய மொழியைப் பேசுதல்.
கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடல்.
கலாச்சார நடவடிக்கைகளில் ஈடுபடல்

தர்சிகா:நா
தரம்: 10

## கதைகள்

### நல்லது செய்தால்..!

சுரேந்திரகுமார் என்பவர் திருமண வீடொன்றிற்குச் சென்றுவிட்டு ஊர் திரும்புவதற்காக ரயில் நிலையத்தை அடைந்தார். அப்பொழுது மாலை ஆறு மணி. ரயில் வருவதற்கு இன்னும் சற்று நேரம் இருந்ததால் அவர் காலியாக இருந்த ஒரு பெஞ்சில் போய் உட்கார்ந்து கொண்டு தம் கையில் இருந்த ஒரு கதைப் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தார். சற்றுத் தூரத்தில் ஓர் இளம் தம்பதியினர் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தனர்.

அப்பொழுது திடீரென்று யாரோ அவர் இருந்த பெஞ்சை இழுக்கவே அவர் யார் என்று பார்த்தார். சுமார் இரண்டு வயதுடைய ஓர் அழகிய கள்ளங் கபடமற்ற குழந்தை பெஞ்சை பிடித்து இழுத்துக் கொண்டு இருந்தது. உடனே அவர் புத்தகத்தை வைத்து விட்டு அந்தக் குழந்தையைத் தூக்கித் தம் மடியில் வைத்துக் கொண்டு அதோடு விளையாட ஆரம்பித்தார். குழந்தையும் அவரோடு விளையாடியது.

சிறிது நேரத்தின் பின்னர் ரயில் வரும் சத்தம் கேட்கவே, பக்கத்து பெஞ்சில் உட்கார்ந்திருந்த தம்பதிகளைப் பார்த்து சுரேந்திரகுமார் "இந்தாருங்கள் உங்கள் குழந்தை" என்று குழந்தையை நீட்டினார். ஆனால் என்ன ஆச்சரியம்! அவர்கள் அந்தக் குழந்தை தங்களுடையது அல்ல என்று சொல்லி விட்டார்கள்.

இதற்குள் ரயில் வந்து விட்டது. மக்கள் ரயிலில் ஏறுவதும், இறங்குவதுமாக இருந்தார்கள். சுரேந்திரகுமாருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. இந்த மாலை ரயிலை விட்டால், அடுத்த நாள் விடியற்காலை நான்கு மணிக்குத்தான் ரயில். ரயில் போனால் போகட்டும் என்று தீர்மானித்துக் குழந்தையை எடுத்துக் கொண்டு, சற்றுத் தொலைவில் இருந்த பொலிஸ் நிலையத்துக்குச் சென்றார். அங்கு ஒரு தம்பதியர் தமது இரண்டு வயதுக் குழந்தையைக் காணவில்லை என்று புகார் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். குழந்தையை சுரேந்திரகுமார் கொண்டு வருவதைப் பார்த்ததும் அவர்கள் அடைந்த ஆனந்தம் கொஞ்ச நஞ்சமன்று. அவர்கள் அவரை வாயார வாழ்த்தினார்கள்.

குழந்தையைப் பெற்றோர்களிடம் கொடுத்து விட்டு, சுரேந்திரகுமார் ரயில்வே நிலையத்துக்கு ஓடோடி வந்தார்கள். ஆனால் அதற்குள் ரயில் கிளம்பிப் போய் விட்டது.

அடுத்த நாள் ரயிலில் தான் செல்ல வேண்டும். வேறு வழியில்லை அவர் வந்து பெஞ்சில் உட்கார்ந்த போது ரயில் நிலையத்தில் ஏதோ பரபரப்புக் காணப்பட்டது. என்னவென்று விசாரித்தார். சற்று முன்னர் புறப்பட்டுச் சென்ற ரயில் பாதையை விட்டு விலகித் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகி விட்டதாகவும், அதனால் பலருக்கு காயம் என்றும் சொன்னார்கள்.

சுரேந்திரகுமார் மனக்கண்ணில் அந்தக் கள்ளங் கபடமற்ற குழந்தையின் சிரித்த முகம் தோன்றிற்று. தாம் அந்தக் குழந்தையைக் காப்பாற்றவில்லை. குழந்தை தான் தன்னைக் காப்பாற்றியிருக்கிறது என்று அந்தக் குழந்தையை மனதால் வாழ்த்தினார்.

நல்லது செய்தால் நல்லது தான் கிடைக்கும் என்பதற்கு இக்கதை நல்ல உதாரணம் அல்லவா?

ர.கவினா

### விடுகதைகள்

1. அழுக்கை அதிகம் சேர்க்கும் நமைச்சலுக்கு உதவும் கிள்ளும் செயலைச் செய்யும் அது என்ன?

   நகம்

2. இது உறுதியாக இருந்தால் மனமும் உறுதியாக இருக்கும் அது என்ன?

   உடல்

3. எட்டுக் கால் பெற்று ஒட்டும் பசையால் வீடு கட்டி தட்டுத்தடுமாறாமல் ஓடியாடி வாழும் அது என்ன?

   சிலந்தி

4. இரும்பைக் கண்டால் விடமாட்டான் வடக்கு தெற்கு காட்டுவதிலே இவனே சிறந்தவன் அவன் யார்?

   காந்தம்

5. முழு நிலவைக் கண்டால் ஆட்டம் போடுவான் நடுப்பகலில் பாவம் அடங்கியே போவான் அவன் யார்?

   அலை

6. பறவைகள் வயிற்றில் உருவாகும் மாய புட்டியில் இரு வேறு தைலங்கள் இணையாமல் அது என்ன?

   முட்டை

7. நாற்காலியின் தம்பி ஒரு கால் குறைந்தும் பல காலம் தாங்குவான் பல்வேறு துணை செய்வான் அவன் யார்?

   முக்காலி

8. ஆணுக்கும் பெண்ணுக்கும் முதல் அழகே இவன் தான் ஆண்டவனுக்கு காணிக்கையாவதும் இவன் தான் யார் அவன்?

   முடி

9. எதையும் யாரையும் எங்கும் ஒளிபட்டால் போதும் தொடர்வான் கருமை மன்னன் அவன் யார்?

   நிழல்

10. தச்சர் செதுக்காத மரம் அது என்ன?

    வாழைமரம்

மு.சுவேனியா

தரம்-7

# கண்ணீரின் பயணம்

**முன்னோட்டம் :- விதுவின் வீட்டில் பல்லிச் சத்தங்களைத் தவிர எஞ்சியது வேறெதுவும் இல்லை. பாசத்திற்காக ஏங்கும் அவனது விழிகள் வரண்டு போயின. ஆன்றொரு காலம் விதுஷன் தன் குடும்பத்தாருடன் உறவாட மகிழ்ந்த மண்ணை நோக்கி தன் கடந்த கால வீணையை மீட்டினான்.**

விதுஷன் அன்றொரு காலம் தனது தாய் தந்தையுடன் தன் சகோதரர்களான தனாவுடனும் தம்பி சபேசுடனும் ஆனந்தமாகக் கானம் பாடி மழை பெய்த காலம் அது விதுவின் தாய் தன் பிள்ளைகளை ஆன்றோர் முன்னிலையில் சான்றோனாக்க அனைவரையும் நன்றாகப் படிக்க வைத்தாள். விதுஷன் புலமைப் பரீட்சை எழுதும் காலம் கிட்டியதும் விதுவின் அப்பா அவனை ஊக்கத்துடன் பாடசாலைக்குக் கூட்டிச் சென்று அவனது மேலதிக படிப்பிற்கும் உதவி அளித்தார்.

அன்று புலமைப் பரீட்சை எழுதும் நாள் விதுஷன் தன் தாயிடமும் தந்தையிடமும் விடைபெற்றுச் சென்றான். அன்று தான் விதுஷனின் 'கண்ணீரின் பயணம்' தொடங்கலாயிற்று. விதுஷன் பாடசாலைக்கு சென்று கொண்டிருக்கையில் எதிர்பாராத விதமாக வீதியைக் கடந்தான். அப்போது திடீரென அவன் விபத்துக்குள்ளாகி வீசப்பட்டான். விதுஷன் கண்விழித்துப் பார்த்த போது தான் மருத்துவமனையில் இருப்பதை உணர்ந்தான். உடம்பு முழுவதும் ஒரே கட்டுப் போடப்பட்டிருந்தது. அவன் சற்று வலப்பக்கமாகத் திரும்பிப் பார்த்த போது என்ன அதிர்ச்சி அவனால் நம்ப முடியவில்லை. அவனது வலது கை இல்லாமல் பல கட்டுக்கள் கட்டப்பட்டிருந்தன.

பாவம் விதுஷன் என்ன செய்வான். வாழ்விற்கே அச்சாணியான வலது கையை இழந்தான். அது ஒருபுறமிருக்க தான் புலமைப் பரீட்சை எழுதவில்லையே என்ற ஏக்கம். ஆந்தக் கணப்பொழுதில் அவனது எண்ணங்கள் சிதைக்கப்பட்டன. ஆவன் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்தது. சற்று நேரத்துக்குள் எல்லாம் அவனுடைய அப்பாவும் அம்மாவும் அங்கு வந்து அவனைக் கண்டு கதறித் துடித்துப் போனார்கள். விதுவை சான்றோர் முன்னிலையில் முழு மனிதனாகப் படைக்க நினைத்த அவர்களது எண்ணங்கள் சிதைக்கப்பட்டன. சுகம் தேடித் தருவான் என்றிருந்தனர். ஆனால் அவன் கைகள் இல்லாமல் சுமைகளை அள்ளி அவர்களது மனதுக்குள் போடலாயிற்று. கூலம் செய்த கோலம் விதுஷனின் வாழ்வு விளிம்புக்குள் நகர்த்தப்பட்டது.

சில காலம் சென்ற பின் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று விதுவின் வாழ்க்கையும் ஆகிவிட்டது. அவனது தாய் அவனது எதிர்காலம் பற்றி ஏங்கி ஏங்கி மனநோயாளி ஆகினாள். பின்னர் அவள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள் அவனது தந்தை தான் அவர்களை வீட்டில் கவனித்து வந்தார். மூவரையும் பாடசாலைக்கு அனுப்பி விட்டு வேலைக்குச் செல்வார். அவ்வாறு ஒருநாள் விதுஷன் பாடசாலைக்குச் சென்று வரும் போது அழுது கொண்டு வந்தான். அவனது அப்பா அவனை அன்போடு வினவினார். ஆப்போது அவனால் கூறவே முடியாமல் வார்த்தைகள் தடுமாறி "அப்பா .......... நான் இனிப் படிக்கப் போகவில்லை" சற்றும் எதிர்பாராத தந்தையார் ஏன் என்று கேட்க அப்பா என்னால் எழுத முடியாமல் இருந்தேன். ஏங்கள் வகுப்பறைக்குள் வந்த புதிய ஆசிரியர் எல்லோரையும் பரீட்சித்துப் பார்ப்பதற்கு வினா தந்தார். நான் எழுதாமல் இருப்பதைக் கண்டு ஏன் எழுதவில்லை என்று கேட்டார். அதற்கு நதி சொன்னான் அவன் சேர் கையில்லாத சொத்தி என்றான். ஏன்னைப் பார்த்து எல்லோரும் கேலியாகச் சிரித்தனர். நான் இகிப்பாடசாலை போகவில்லை என்று கூறி விக்கி விக்கி அழுதான். அவனது அப்பாவால் பதில் கூற முடியவில்லை.

அவனது தாய் தீவிர மனநோயாளி ஆகினாள். அவன் தன் பிள்ளைகளையும் கணவனையும் மறந்த நிலையில் வைத்தியசாலையில் இருக்கின்றாள். விதுவின் குடும்பத்தவர்களின் தடம்புரண்ட கனாக்காலங்கள் ஆகியது. நாட்கள் ஓடின. மாதங்கள் சென்றன. வருடங்கள் கடந்தன. விதுவின் தந்தையார் வயதும் கடந்தது. தோழில் செய்ய முடியாதவராகியதால் வாழ்வை வறுமை வாட்டியது. விதுவின்தந்தை தன் இரு பிள்ளைகளையும் நன்றாகப் படிக்க வைப்பதற்காக தன்னைப் போல அவர்களும் துன்பப்படாமல் இருப்பதற்காகவும் வேற்று நாட்டில் இருந்து வந்த குழந்தைப் பேறு இல்லாத இரு தம்பதியினருக்கு தன் இரு பிள்ளைகளையும் கொடுத்து சான்றோனாக்க நினைக்கும் ஆசைகளையும் கூறி அவர்களை ஒப்படைத்தார்.

விதுஷன் என்ன செய்வான். அவன் ஊனமுடைய பிள்ளையல்லவா. அவனைத் தத்தெடுக்க யாரும் விரும்பவில்லை. அவன் தனது இரு சகோதரர்களையும் இழந்து கதறிக் கதறி அழுதான். எப்பொழுதும் தனது இரு சகோதரர்களையும் நினைத்த வண்ணம் இருந்தான். ஆன்றோர் நாள் தன் தாயுடனும், தந்தையுடனும் சகோதரர்களுடனும் கானம் பாடிக் கூடித்திரிந்த அவனது வாழ்வு, இன்று தெய்வத்தின் வஞ்சகப் பார்வையால் அவன் வாடி வதங்கிப் போய் விட்டான். தந்தையும் படுக்கையாகி விட்டார். அவனது வீடும் விடிவற்று வெறிச்சோடிக் கிடந்தது. சில காலம் சென்றதும் தந்தை காலமானார். அவன் வாழ்வு புதைகுழிக்குள் வீழ்த்தப்பட்டது. துந்தையின் சடங்குகளை தந்தையுடன் தொழில் புரிபவர்களைக் கொண்டு சடங்கை முடித்தான்.

தந்தையின் இறப்பும் சகோதரர்களின் பிரிவும் விரக்தியடையச் செய்தது. துன் தாயின் நிலை என்னவோ என்று தெரியாது தவித்தான். விதுவின் வாழ்வில் இனி விடிவேது! விதுஷன் அநாதையா..........? என்று தான் கண்ணீரின் பயணம் முடியுமோ!

சி.ரேகா

A/L 2008

## பவானி மிக்சர்

யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த கமலன் தனது பெற்றோர்களது வழிகாட்டல் அபிலாசைக்கு ஏற்ப ஆரம்பக் கல்வியினை மேற்கொண்டு வந்தான். இவ்வாறாகக் கல்வி கற்று வந்த கமலன் 5ஆம் தரப் புலமைப் பரீட்சையில் சிறப்பாக சித்தி யடைந்தமையானது பெற்றோர் தம் மனதில் கொண்டிருந்த அபிலாசையினை அவன் உள்ளத்தில் விதைப்பதற்கும், வலுவூட்டுவதற்கும் வாய்ப்பாக அமைந்தது. பெற்றோர் தமது விவசாய முயற்சி மூலமாக கடினப்பட்டு உழைத்த வருமானத்தைக் கொண்டு கமலன் எதிர்காலத்தில் சிறந்த பொறியியலாளராக உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவனது கல்வியில் கவனம் செலுத்தத் தொடங்கினர்.

பெற்றோரின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட கமலன் தனது இடைநிலைக் கல்வியினை மிகவும் சிறப்பாக மேற்கொண்டு வந்தான். இருப்பினும் கமலன் க.பொ.த (உயர்தரம்) பெறுபேறுகள் மிகவும் சிறப்பாக அமையாததால் அவனது எதிர்கால இலட்சிய உணர்வில் சற்றுத் தடுமாற்றம் ஏற்பட அவன் தனது எண்ணத்தினை ஏதாவது ஒரு சிறிய தொழில் முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் தனது பெற்றோருடைய கஷ்டங்களை போக்குவதோடு தான் எதிர்காலத்தில் இலகுவாக உழைக்கக் கூடிய ஓர் தொழில் முயற்சியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற உன்னத இலட்சியத்துடன் தெரிந்த உறவினரின் காணியில் ஐந்து வெறும் பரல் மண்ணெண்ணெய் தகரங்களையும் வீட்டிலிருந்த பொருட்களையும் வைத்து மிக்சர் செய்யும் தொழிலை ஆரம்பித்தான்.

இம்முயற்சியினை ஆரம்பிக்கும் போது அவனுக்குத் துணையாக தாய் தந்தையாரும் தோட்டத்தில் பணியாற்றிய அயலவர் சிலரும் உதவி புரிந்தனர். இவ்வாறாக இரண்டு மூன்று கிலோகிராம் பவானி மிக்சர் என அறிமுகஞ் செய்தனர். அவனது விடா முயற்சியினாலும் கடின உழைப்பினாலும் ஆரம்பத்தில் இருந்தே மக்களிடம் நல்ல ஆதரவு கிடைக்கப்பெற்றது. இதனால் ஒரு கிலோக்களை உற்பத்தி செய்வதற்காக ஒரு தொகை உள்ளீடுகளையும் கொள்வனவு செய்த கமலன் ஆறு மாத காலத்தில் சொந்தமாக தனக்கு ஓர் துவிச்சக்கர வண்டியையும் தம்முடன் வீட்டில் பணியாற்றுவதற்கு நான்கு ஐந்து பெண் தொழிலாளர்களையும் வேலைக்கு அமர்த்திக் கொண்டான்.

மேலும் அவனின் தொழில் வளர்ச்சி காரணமாக சிறியளவில் கொள்வனவு செய்த உள்ளீடுகளை வர்த்தக நிறுவனம் சில, மூடைகளாகவும் எண்ணெய் பரல்களாகவும் கடனாகக் கொடுத்து உதவ முன்வந்தார்கள். இதன் காரணமாக அவனது தொழில் நடவடிக்கை மேலும் வலுப்பெற்று வளர்ச்சி யடையத் தொடங்கியதற்கு சான்றாக அவனது பரந்தளவில் கேள்வியை உருவாக்கின. இதன் காரணமாக கமலன் பத்து சதுர அடியில் ஆரம்பித்த தன்னுடைய தொழில் முயற்சியினை விஸ்தரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன் காரணமாக தனது விற்பனை நிலையத்தினை ஓர் சிறிய தற்காலிக கட்டிடமாக விஸ்தரித்ததோடு தனது உற்பத்திக்கு தேவையான பணியாளர்களின் எண்ணிக்கையினை ஐந்திலிருந்து பதினைந்தாக உயர்த்தினான்.

மேலும் காலத்தின் தேவை கருதி நல்லதோர் எம்.டி 90 மோட்டார் சைக்கிளையும் கொள்வனவு செய்து கொண்டான். இவ்வாறு கமலனின் தொழில் முயற்சியானது இரண்டாவது ஆண்டு நிறைவில் யாழ் குடாநாட்டிலேயே எல்லோராலும் மதிக்கப்படுகின்ற தனி வியாபாரமாக வளர்ச்சி யடைந்தது. இந்த வளர்ச்சியானது அவனுக்கு மேலும் நம்பிக்கையும் உற்சாகத்தினையும் வலுவூட்டியதன் காரணமாக அவன் தனது முயற்சியினை விரிவுபடுத்த எண்ணினான். இந்நிலையில் தனது தொழில் விஸ்தரிப்புக்காக உறவினரின் காணியை கொள்வனவு செய்வதற்கும் நவீன வசதியுடன் கூடிய பெரியதொரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கும் வங்கி யிடமிருந்து கடன் பெற்றுக் கொண்டான். இவ்வாறு பெற்றுக் கொண்ட கடன் மூலமாகவும் தனது முயற்சியினாலும் நவீன வசதிகளுடன் அழகான மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றினை ஆரம்ப இடத்திலேயே நிர்மாணித்தான். இந்நிலையில் அவனது வியாபார முயற்சியானது குடும்ப உறுப்பினர் அனைவரைம் உள்ளடக்கி பாரிய வியாபார முயற்சியாக விரிவடைந்தது. ஆத்தோடு மானிப்பாய் வீட்டில் அமைந்திருந்த வீட்டுடன் கூடிய உற்பத்திப் பகுதியானது ஒரு சிறிய தொழிற்சாலை போன்ற அமைப்பினைக் கொண்டு ஏறத்தாழ நூறு பேருக்கு நேரடி வேலை வாய்ப்பினையும் ஐம்பது பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பினையும் வழங்கும் ஓர் உற்பத்தி நிலையமாக புதுப்பொலிவுடன் காணப்பட்டது.

இந்நிலையில் தனது உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள் கொள்வனவுக்காகவும் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் தனது வாடிக்கையாளருக்கு சீரான தொடர்ச்சியான விநியோகத்தை மேற்கொள்வதற்காகவும் ஓர் புதிய வான் ஒன்றினையும் கொள்வனவு செய்தான். இதன் மூலமாக அவனது உற்பத்தி, விநியோக நடவடிக்கைகள் மிகவும் விறுவிறுப்பாகவும் விரைவாகவும் நடைபெற்றது.

இச்செயற்பாடுகளுக்கு கமலன் தன் பணியாளர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையும் அவர்களுக்குக் கொடுத்த நல்ல கவர்ச்சியான ஊதியம் ஊக்குவிப்பு போன்றன காரணமாகும். அவனது நிறுவனத்தின் பவானி மிக்சர் தரமானது மிகவும் உயர்வாக இருந்ததன் காரணத்தினால் குடாநாடு முழுவதும் நல்ல சந்தை வாய்ப்பினை தொடர்சியாகப் பெற்று வந்தது. இந்நிலையில் நாட்டின் சூழ்நிலைகள் ஒரு சீரான நிலையில் இருக்குமாயின் தனது உற்பத்திக்கான சந்தை வாய்ப்பினை ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிப்பு செய்வதற்கான திட்டங்களையும் தயாரித்து வருகிறான்.

பா.மதிவதனி
தரம் -11

**கதைகள்**

## கவிதைகள்

### குயிலே மயிலே

குயிலே குயிலே பாடு
கூக்கு குயிலே பாடு
வசந்தம் போன்ற குயிலும் நீயே
வந்து கீதம் பாடு

மயிலே மயிலே ஆடு
அழகு மயிலே ஆடு
அழகான தோகையாலே
ஆனந்தமாக ஆடு

ஆடிப்பாடு குயிலே
ஆடிப்பாடு மயிலே
கூடிக் கூடி வாழு
கூடிக் கூடி ஆடு

பாடு பாடு குயிலே
ஆடு ஆடு மயிலே
ஒற்றுமையே பலமென
ஒன்றாய் சேர்ந்து ஆடு

ஜெ.ஜெனக்ஷா
தரம் - 03

### அக்கா

உடன் பிறந்த சகோதரியாய்
உண்மை அன்பு கொண்டு
பாசம் பொழிந்த என் அக்காவே !
சுற்றி வரும் பூமி தன்னில் - பல
சுற்றத்தாரைக் கண்டிருந்தேன்
உன்னைப் போல அன்பை
அள்ளிச் சொரிந்தவர் யாருமில்லை!
போலி வேஷம் போட்டுப் பழகிய
உறவுகளில் நிஜமான பாசம் கொண்டு
என்னை அரவணைத்தாய்
தவறு செய்யும் போது
தட்டிக் கேட்டாய்
மேடை ஏறி வரும் போது
வாழ்த்தி நின்றாய் அக்கா!
உண்மை உறவென்று வந்த நீ
என்னைப் பிரிந்து வாழ்ந்தாலும்
உள்ளத்தில் உன் நினைவு
என்றும் அழியாது

ர.சயந்தன்
தரம் - 10

### பெற்றேர் மகிமை

அன்னை பிதாவைப் போற்றுவோம்
முன்னறி தெய்வம் அவர்கள்
எம்மைக் காக்கும் உத்தமர்கள்
வணங்கிப் பணிவோம் பெற்றோரை

துன்பம் பல சுமந்திடுவாள்
இன்பம் பலவும் துறந்திடுவாள்
துன்பம் தாங்கும் வெண்நிலவாள்
அன்னைக் கீடாம் பொருளுண்டோ

தூணைப் போலத் தாங்கிடுவாள்
உறையும் பாலை ஊட்டிடுவாள்
நிறையத் துன்பம் தாங்கிடினும்
குறையற எம்மை வளர்த்திடுவாள்

இன்ப மொழிகள் பேசிடுவாள்
என்றும் பூப்போல் மலர்ந்திடுவாள்
உடம்பில் எண்ணெய் தடவி எம்மை
உடல் நலம் பேணி வளர்த்திடுவாள்

நன்றாய்ச் சமையல் படைத்திடுவாள்
நன்றாய்க் குளிக்கவும் செய்திடுவாள்
அன்பாய்ச் செல்ல மொழியும் பேசும்
ஈன்ற தாயைப் போற்றிடுவோம்

வயதான போதும்
உடல் நலிந்த போதும்
வறுமை கண்ட போதும்
பெற்றோரை வணங்கி வழிபடு

பெற்றோர் சொன்ன வார்த்தை
தேவையாயின் செய்து விடு
அன்பை விட்டு நீங்காதே
நல்லன செய்வாய் சோர்வின்றி

பெற்றோரின் முன்னிலையில்
உயர்ந்த இடத்தில் அமராதே
நிலவைப் போன்ற பெற்றோர்கள்
வணங்கிக் கும்பிடு எப்போதும்

ந.சந்திரிக்கா
தரம் - 10

## கவிதைகள்

# இந்து போர்ட் சு.இராசரத்தினம்

இலங்கையில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதியில் சைவம் வளர்த்த சான்றோர்களில் சு.இராசரத்தினம் அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார். ஆறுமுகநாவலரதும் அருணாசல உபாத்தியாரினதும் மரபினை பின்பற்றிச் சைவத் தமிழ்க்கல்விப் பாரம்பரியம் தழைத்தோங்க அரும் பணியாற்றியவர் ஆவார்.

சு.இராசரத்தினம் 1884ஆம் ஆண்டு ஆடி மாதம் 04ஆம் திகதி பிறந்தார். இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியையும் பயின்றார். கொழும்பு சட்டக் கல்லூரியில் பயின்று சட்டத்தரணியானார்.

இவர் குடியியல் சட்டத்துறையில் சிறந்த அறிஞராக விளங்கினார். யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதியரசராகப் பலதடவை கடமை புரிந்தார். அத்தகைய உயர்ந்த பதவிகளையெல்லாம் ஒதுக்கி விட்டு சைவத்தையும் தமிழையும் வளர்க்கத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் சு.இராசரத்தினம் அவர்கள்.

ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் சைவக் கல்வி மரபு பெரிதும் பாதிப்படைந்திருந்தது. இந்த நிலையில் சைவக் கல்வி மரபையும் சமூகத்தையும் பாதுகாத்து மேன்மைப்படுத்தும் நோக்கில் சு.இராசரத்தினம், சேர் பொன் இராமநாதன் முதலானவர்களால் 1923ஆம் ஆண்டு மார்கழி மாதம் சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அவர் அதன் முகாமையாளராகவும் செயலாளராகவும் இருந்து அதன் இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

அவர் சைவத் தமிழ்ப் பாடசாலைகளையும் தமிழ், ஆங்கிலம் கற்பிக்கும் இருமொழிப் பாடசாலைகளையும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவுப் பகுதியிலும் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம் முதலிய பகுதிகளிலும் வவுனியா, முல்லைத்தீவு முதலான வன்னிப் பிரதேசங்களிலும் சிலாபம், முந்தல் முதலான பிரதேசங்களிலும் பதுளை, நாவலப்பிட்டி முதலான மலைநாட்டுப் பிரதேசங்களிலும் சைவப் பாரம்பரியங்களைப் பேணும் வகையில் அதன் நடைமுறைகள் பேணப்பட்டன. 1958ஆம் ஆண்டு சு.இராசரத்தினம் அவர்களின் மேற்பார்வையின் கீழ் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பொறுப்பில் 187 அரசாங்க நன்கொடை பெறும் பாடசாலைகள் இருந்தன. இது சைவ மக்களிலும் சைவ சமய வளர்ச்சியின் மீதும் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினையும் அர்ப்பணிப்பினையும் எடுத்துக்காட்டி நிற்கின்றது.

சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஒன்றினை உருவாக்க வேண்டிய தேவை அக்காலத்தில் சைவத் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு அவசியமானதாகக் காணப்பட்டது. அதற்கிணங்க 1928ஆம் ஆண்டில் சு.இராசரத்தினம் அவர்களின் தனிப்பட்ட முயற்சியால் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலை ஒன்று உருவாக்கப்பட்டது. அக்கலாசாலையினூடாகச் சைவத் தமிழ்ப் புலமை, இடையறா முயற்சி முதலான நற்பண்புகளை யுடைய நல்லாசிரியர் பலர் உருவாக்கப்பட்டனர். 1963ஆம் ஆண்டுவரை 1500க்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சியை அளித்த இக்கலாசாலையின் பணி குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

சு.இராசரத்தினம் அவர்கள் கிறிஸ்தவ சூழலிலே அநாதரவாகக் காணப்பட்ட சைவப் பிள்ளைகளின் கல்வியிலும் போதிய கவனம் செலுத்தினார். சைவப் பிள்ளைகள் கிறிஸ்தவப் பாடசாலைகளில் கல்வி கற்றாலும் அவர்கள் விபூதி தரித்துத் தமது சைவப் பண்பாட்டிற்கு அமைவாகப் போகலாம் என்பதைச் சட்ட சபையில் தமது தனியாள் தீர்மானத்தின் மூலம் நடைமுறைக்கு கொண்டு வந்தார்.

சைவக் கல்விப் பாரம்பரியத்தை விருத்தி செய்வதன் மூலம் சைவ சமயத்தவரின் சமுதாய வளர்ச்சிக்கு வித்திட்ட சு.இராசரத்தினம் அவர்கள் அநாதரவான பிள்ளைகளும் சமூகத்தில் பின்தங்கிய மக்களும் கல்வி கற்பதற்குரிய வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தார். அவர் 1930இல் திருநெல்வேலியில் ஆண்களுக்கும், பெண்களுக்குமான இரு அநாதை விடுதிகளையும் பாடசாலைகளையும் உருவாக்கினார். அவை இன்றும் சிறப்புடன் இயங்கி வருகின்றன. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கீழ் இயங்கிய பாடசாலைகளில் எல்லாம் அக்காலத்தில் பின்தங்கிய சமூகத்தவராகக் கருதப்பட்டவர்களின் பிள்ளைகளையெல்லாம் மேல்நிலை மக்களின் கடும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் மிகுந்த துணிவுடன் சேர்த்துக் கொண்டார். அதன் மூலம் பிற்பட்ட சமூகத்தவரின் சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினை அறிய முடிகின்றது.

சு.இராசரத்தினம் அவர்கள் நாவலரைப் போல் சைவ சமயத்தின் முதல் நூல்களாகத் திருமுறை பேணப்பட வேண்டும் என்பதிலும் தேவார திருமுறைகளைப் பண்ணோடு பாடுதல் வேண்டும் என்பதிலும் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். அதனால் தேவாரத் திருமுறைகளைப் பண்ணோடு பாடிப் பயன்பெறவும் வழிகாட்டினார். இவர் 1954இல் வித்தியாசாலையில் பண்ணிசை ஆசிரியர்களை நியமித்துப் பல ஆசிரிய மாணவர்கள் பயிற்சி பெற உதவினார். இதன் பயனாக சைவப் பாடசாலைகளில் திருமுறைகளைப் பண்ணோடு பாடும் மரபும் பேணப்படலாயிற்று.

சு.இராசரத்தினம் அவர்கள் சுமார் 35 ஆண்டுகளாக மேற்கொண்ட தொண்டின் பயனாக சைவ வித்தியா விருத்திச் சங்கம் சைவத் தமிழுக்கு அரும்பணி புரிந்தது எனலாம். அவரது பணியின் பெருமையை இந்துபோர்ட் சு.இராசரத்தினம் என்ற பெயரே உணர்த்தி நிற்கின்றது. ஈழத்துச் சைவத் தமிழ் மக்களுக்கு அரும்பெரும் தொண்டாற்றிய இச்சைவப் பெருமகன் 1970ஆம் ஆண்டு பங்குனி 12ஆம் திகதி சிவபதமடைந்தார்.

இ.மயூரி
தரம் - 09

**சொல்ல வல்லவன் சோர்வு இலன் அஞ்சான்**
**அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது**

—குறள்

ஓர் ஊரிலே கமலும், தீபனும் என்ற இரண்டு நண்பர்கள் வாழ்ந்து வந்தார்கள். குமலன் செல்வந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவன். தீபன் மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவன். கமலனோ பணத்தினால் எல்லாவற்றையும் சாதிக்கலாம் என்று எண்ணினான். ஆனால் தீபனோ தான் கற்கும் கல்வியே தன் உயிர் நாடி என்று தினமும் முயன்று வந்தான். தீபனின் முயற்சியையும் அவனைப் பிறர் புகழ்வதையும் அவனுக்குப் பிறரால் வழங்கப்படுகின்ற புகழ் உரையையும் கமலனால் நம்பவே முடியவில்லை. தனது நிலையென்ன இவனது நிலையென்ன என்று பல தடவை சிந்திக்கலானான். அவர்கள் இருவருக்கும் இடையில் இருந்த நட்பு கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியது. அது காலப்போக்கில் பெரிய இடைவெளியைத் தோற்றுவித்து கமலனோ தீபனை அதிபர், ஆசிரியர் மற்றும் மாணவர்கள் முன்னிலையில் அவமாகப்படுத்த எண்ணினான்.

இதனைத் தவிர தீபனை கமலனால் வெல்ல முடியாது. படிப்பிலோ, விளையாட்டிலோ மற்றும் அறிவு சம்பந்தப்பட்ட துறையிலோ தீபன் நல்ல திறமைசாலியாகவும் பிறர் வரவேற்பையும் பெற்றவனாகத் திகழ்ந்தான். கமலன் தீபன் செய்கின்ற ஒவ்வொரு செயற்பாட்டையும் உன்னிப்பாகக் கவனிக்கலானான். அவன் தீபனின் கல்விக்கும் உயர்ச்சிக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைப்பதற்காக எண்ணினான். தீபன் ஏதாவது தவறுதலாக யாரைப் பற்றியும் குறையாக அல்லது இகழ்ச்சியாகக் கதைத்தால் அதனைப் பிறருக்குச் சொல்லி அவமானப்படுத்தத் திட்டம் தீட்டினான். குமலனின் இந்தத் திட்டத்திற்கு தீபன் உடன்படவில்லை. அவனோ அச்சொல்லைச் சொன்னாலும் அச்சொல்லில் உண்மையோ அன்றி இகழ்ச்சியோ இருக்காது. ஆனைத்தும் பிறரைக் கவரக் கூடியனவாக இருக்கும். ஆவன் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் எந்த முரடரையும் மூடனையும் கவர்ந்து விடும் அந்தளவு இனிமை எந்த சூழ்ச்சியும் வெற்றியளிக்காமையினால் தீபனை கல்வியிலே தோற்கடிக்கலாம் என போட்டி இன்றி பொறாமை மிகுதியினால் செயற்படுவான்.

கமலன் பொறாமைக்காரன். ஆனால் தீபனோ பொறுமைசாலி. தீபன் எந்த விடயத்திற்கும் சோர்வு இன்றி அந்த விடயங்களை அன்றே நன்றே செய்வான். குமலன் தீபன் விளையாட்டு நேரங்களில் சோர்வாக இருந்தால் அன்றி ஏதாவது விடயங்களில் அவன் தளர்ந்து காணப்பட்டால் தன்பலத்தை அங்கு பிரயோகிக்க பிரயோகிக்க எண்ணினான். சோர்வு என்றதை அறியாத தீபன் எப்போதும் சுறுசுறுப்புடனும் உற்சாகத்துடனும் எந்த விடயங்களையும் செய்வான். தனது இரண்டாவது சூழ்ச்சியும் தோற்றுப் போய்விட்டதை அறிந்த கமலன் தீபனை ஏதாவது வீண் பிரச்சனையில் இருந்து மாட்டி வேடிக்கை பார்க்க எண்ணினான். ஒரு முறை காலை நற்சிந்தனைக்கு தீபனை ஆயத்தஞ் செய்யச் சொல்லுமாறு கமலனுக்கு ஆசிரியர் கட்டளையிட்டார்.

எங்கு சந்தர்ப்பம் என்று எதிர்பார்த்த கமலன் தீபனுக்கு எதுவும் சொல்லவில்லை. அன்று கூட்டத்தில் தீபனின் பெயர் வாசிக்கப்பட்டது. குமலன் தீபன் அவமானப்படப் போகிறான் என்று பெரும் இறுமாப்புடன் நின்றான். மேடையேறிய தீபன் முன்பே ஏற்பாடு செய்தவன் போன்று சற்றும் அஞ்சாது மெடையிலே அசத்தி விட்டு வந்தான். தீபனின் அஞ்சாத குணம் அவனை மேன்மேலும் உயர்ந்த பேச்சாளன் ஆக்கியது. அவன் மேடைப் பேச்சில் மட்டுமல்ல. எந்த விடயத்தையும் தனக்கும் பிறருக்கும் நன்மை பயக்கும் என்றால் அவ்விடயத்தை தற்துணிவுடனும் சற்றுப் பயமும் இன்றி திறம்படச் செய்வான். தீபனின் சொல் வன்மையும் , சோர்வு அற்ற பண்பும், அஞ்சாமையும் அவனை மேன்மேலும் உயர்த்தியது. இக்குணவியல்பு தீபனிடம் தாராளமாக இருந்தமையினால் கமலனால் எதையும் சாதிக்க முடியவில்லை.!

ஆகவே! சகோதர சகோதரிகளே நாம் சொல்லிலோ உறுதி உடையவராகவும் சோர்வு இல்லாதவர்களாகவும் எதற்கும் அஞ்சாதவர்களாகவும் நமக்கு உரிய வேலைகளைத் திறம்படச் செய்தால் நம்மை யாருமே வெல்ல முடியாது. வருங்கால உலகைக் கட்டியெழுப்புகின்ற தூண்களாகவும் சிற்பிகளாகவும் திகழப் போகின்ற நாம் சிறு வயதிலேயே மனித நேயப் பண்புகளை வளர்ப்பதன் மூலம் நாம் எதிர்காலத்தில் தெய்வீக மனிதனாகச் சிறக்கலாம். அச்சம் என்பது ஒரு கொடிய நோய் இதனை விடுத்தால் நாம் சொல்லுகின்ற பாதையில் எதுவித தடையும் இருக்காது. இதற்காகவே பாரதி "அச்சம் இல்லை அச்சம் இல்லை" என குழந்தைகள் பெரியவர்களுக்கும் தனது பாட்டுத் திறமையினால் விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளார்.

ந.சங்கீதா
தரம் - 11

## கட்டுரைகள்

## சுத்த வீரன் போரஸ்

கிரேக்க தேச மன்னன் அலெக்சாண்டர் பல நாடுகள் மீது படையெடுத்துப் போரிட்டு வெற்றி யடைந்தவர். அவரை எவராலும் வெற்றி கொள்ள இயலவில்லை. அதன் காரணமாகவே அவரை 'மாவீரன்' என்று அனைவரும் போற்றினார்கள். இவ்வளவு வலிமையும் வீரமும் பொருந்திய அலெக்சாண்டரையே எதிர்த்த மன்னர் ஒருவரும் இருந்தார். அவர் தான் போரஸ் மன்னர்.

பல நாடுகளை வென்றுவிட்டு இந்தியா மீது படையெடுத்த போது அவரைத் தைரியமாகச் சிந்த நதிக் கரையில் எதிர்த்துப் போரிட்ட ஒரே மன்னர் போரஸ் மட்டுமே. அவரை அலெக்சாண்டர் நேருக்கு நேராகச் சண்டையிட்டு வெற்றி கொள்ள முடியாது போனது. தந்திரமாகவே அவரை வெல்ல முடிந்தது. போரஸ் மன்னரைக் கைது செய்து அலெக்சாண்டர் முன் நிறுத்தினர். இருந்த போதிலும் போரசின் தைரியத்தை மெச்சிய அலெக்சாண்டர் அவருக்கு உரிய மரியாதை அளிக்க விரும்பினார்.

வீரரே உம்மை எவ்வாறு நான் நடத்த வேண்டும் என்று விரும்புகிறீர் நண்பராகவா? ஆல்லது எதிரியாகவா? என்று வினவினார். அலெக்சாண்டரின் கேள்வியைக் கேட்ட போரஸ் எதிரியாக நடத்து என்று கூறினால் தன்னை வெட்டி வீழ்த்தி விடுவார். நண்பனாக நடத்து என்றால் உயிர்ப்பிச்சை கேட்டது போலிருக்கும். என்ன பதில் கூறலாம் என யோசித்து விட்டு ஒரு சுத்த வீரனை ஓர் சுத்த வீரன் நடத்துவது போல் எம்மை நீர் நடத்திடுக என்று கூறினான்.

அலெக்சாண்டரின் இடக்கு மடக்கான கேள்விகளுக்குப் புத்திசாலித்தனமாகப் பதிலடி கொடுத்த போரசின் சாதுரியத்தை எண்ணி வியந்த அலெக்சாண்டர் அவரைத் தன் நண்பராக ஏற்றுத் தாம் வென்று கைப்பற்றிய போரசின் நாட்டைத் திருப்பிக் கொடுத்துவிட்டுத் தன் நாடு திரும்பினார். சுத்த வீரனுக்கு எங்கே போனாலும் மதிப்புத்தான்.

வி.இலங்கேஸ்வரன்
தரம் - 11

## நாம் வளர்த்துக்கொள்ள வேண்டிய பண்புகள்

- பொறுமை
- அன்பு இரக்கம் காட்டல்
- நீதியை மதித்தல்
- நம்பகத்தன்மை
- நடுநிலைமையாச் செயற்படல்
- வளங்களை வீணடிக்காமை
- பொறுப்புக்களை நிறைவேற்றிக்கொள்ளல்
- விட்டுக்கொடுத்தல்
- நேர்மை
- ஒழுங்கைப்பேணுதல்
- நட்புடன் இருத்தல்
- சூழலைப் பாதுகாத்தல்
- ஒழுக்கம்
- தலைமைத்துவத்தை மதித்தல்

## பிரிவு

எத்தனை துன்பம் வந்தாலும்
என்னை ஓடோடி வந்து பார்வையிட்டாய்
நீ இப்போது கண்ணுக்குத் தெரியாத தேசத்தில்
என்னை விட்டு விட்டு ஓடிச் சென்று விட்டாய்
இப்போது உனது பிரிவு என்னை வாட்டுகிறது
உனக்கு எத்தனை சுமை வந்தாலும் அதை
இறக்கி விட்டு தங்கை என்று ஓடி வருவாய்
இப்போது நானும் நீயும் பிரிவுக்குள் உள்ளாகி விட்டோம்
ஒரு தாமரையில் ஒரு நீர் விட்டால் அதில் நிற்காது
அது போலவே தான்
எனது பிரிவும் உனது பிரிவும் .....
ஆறு மாதம் ஆகிவிட்டது
என்னால் தாங்க முடியவில்லை
என்னை நெடுந்தொலைவில் ஆக்கி விட்டது
மனமோ வேப்பம் மரம் போல்
கசப்பாகி விட்டது.
எங்கிருந்தாலும் உன்தங்கையிடம் ஓடிவா
சிறு வயதில் கண்ட உன்னை இன்னும்
காணவில்லை
ஓடோடி வா தங்கையிடம் ..........

யசோதா.யோ
தரம் - 11

கதை

## காலஞ்செய்த கோலச் சிதறல்கள்

காலம் கொண்ட மாற்றங்களில் கமலன் தனது தாய் தந்தையாருடன் இன்பமாகவும் மிக மகிழ்வாகவும் வாழ்ந்து வந்தான் அவனுடன் விளையாட சிறு தங்கையும் இருந்தாள். அவள் மீது கமலனுக்கு அளவு கடந்த அன்பு. அவன் சிறு பிள்ளையாக இருக்கும் போதே மிகுந்த அறிவுள்ளவனாய் இருந்தான் அவனது அறிவாற்றலை கண்டு தாய் தந்தையர் மகிழ்ந்தார்கள்.

பாடசாலை விடுமுறைக்கு வழமைபோல் குடும்பம் அனைவரும் சுற்றுலா சென்று கீரிமலை என்னும் இடத்தில் இறங்கினார்கள். அக்கீரிமலையின் கேணியில் இறங்கி கமலனது குடும்பம் விளையாடிய வண்ணம் குளித்துக்கொண்டிருந்தார்கள. கமலனும் தந்தையும் கேணியால் இறங்கி வந்துவிட்டார்கள்.

தாயும் தங்கையும் சிரித்து விளையாடியவண்ணம் நீராடிக்கொண்டிருந்தார்கள். தந்தை பலதடவை கூப்பிட்டும் வரவில்லை அவர்கள் மகிழ்வில் கடல் தாய் என்ன கோபமோ. ஏன் அவர்களுடன் விளையாட எண்ணினாளோ தெரியவில்லை. அவர்கள் சிரித்த வண்ணமே கடல் அன்னையுடன் சென்று விட்டார்கள்.

கமலன் மனம் பொறுக்க முடியாது தந்தையை பிடித்தவண்ணம் அழுது புலம்பினான். அவன் தாயினதும் தங்கையினதும் பிரிவைத் தாங்கமுடியாது தவித்தான் இருந்தும் தன் மனதினை தானே திடப்படுத்திக் கொண்டு தந்தையுடன் தனது வாழ்வை கழித்து வந்தான். தந்தை அவனுக்கு தாயில்லை என்ற குறையை தெரியாது வளர்த்தார்.

அவனுக்கு ஏழு வயதாக இருக்கும் போது அவனது கள்ள மற்ற பிஞ்சு மனதை விதி கலக்க நினைத்தது ஏனோ அவன் பாடசாலை விட்டு வீடு வந்த களைப்பில் உறங்கிக்கொண்டிருந்தான். தந்தை வீதி விபத்திலே சிக்கி இறந்து விட்ட செய்தி அவன் காதுக்கு எட்டியது. அவன் தன் தந்தை இறந்த வீதியை நோக்கி ஓடினான்.

இவன் தன் தந்தையின் உடலைப்பார்த்து மண்ணிலே விழுந்து புரண்டு அழுதான்இ குழறினான். அந் நேரம் அவன் மனம் "என் விதி அப்போதே தெரிந்திருந்தாலே கற்பத்தில் நானே கலைந்திருப்பேனே" என்று எண்ணிய வண்ணம் அவன் ஒரு கணம் திகைத்துப் போய்விட்டான. அவன் சிந்தனைகள் மாறியது. அவன் மனம் தான் அநாதையாகி விட்டேன் எனக்கு சொந்தமென்று சொல்ல யாருமில்லை என்று எண்ணினான். அவன் தெருத்தெருவாய் அலைந்து திரிந்து யாரோ இட்ட உணவை உண்டு காலத்தைக் கழித்தான்.

அவனுக்கு எட்டு வயதாக இருக்கும் போது ஒரு தேநீர்க் கடையில் வேலை செய்தான். வழமையாக அவன் வேலைகளைச் செய்து கொண்டிருக்கையில அன்று வெள்ளிக் கிழமை முதலாளியின் பையில் பணம் காணாமல் போய்விட்டது. கமலன் ஏழை என்பதாலும் அவன்தான் புதிதாக வேலைக்குச் சேர்ந்தவன் என்பதாலும எல்லோரும் அவன் மீதே சந்தேகப்பட்டனர். அவன் தான் பணத்தை திருடவில்லை என்று கூறியும் முதலாளி மிகவும் துன்புறுத்தினார். அவன் வேதனை தாங்காது துடித்தான். வேலையை விட்டு விலத்தப்பட்டான்.

அவன் அநாதை என்பதனால் எத்தனை துன்பங்களை தாங்க வேண்டியுள்ளது. பின்பு முதலாளியின் பணம் சட்டைப் பையிற்குள் இருந்ததாக சொன்னார்கள். கமலனின் உண்மையை அறிந்து அனைவரும் கமலனை தேடினார்கள் கிடைக்கவில்லை. அவன் வேறு ஊருக்குச் சென்றுவிட்டான்.

அவ்வூரிலும் அவன் தெருவிலே பிச்சைக்காரனாகத் திரிந்தான். ஒருநாள் அவனுக்கு உணவு எதுவுமே கிடைக்கவில்லை. ஒரு மரக்குற்றியில் இருந்து இயற்கையை இரசித்து இனிய குரலிலே பாடல் பாடிக்கொண்டிருந்தான். அவன் இனிய குரல் இப்போது தான் கேட்டதோ? என்னவோ? வழியில் சென்று கொண்டிருந்த நிதிபதி ஒருவர் அவர் நிதிபதி மட்டுமல்ல சிறந்த கவிஞரும் கூட அவனருகே வந்து அவன் பாடி முடிக்கும் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தார். அவன் பாடி முடித்தது கூட தெரியாது. அவ்வளவுக்கு அவனது பாட்டில் திலைத்துப் போனார். சிறிது நேரத்தில் தன் நிலையை உணர்ந்து அழுதான். நீதிபதி மயக்கம் தெளிந்தார். உடனே அவனைப் பார்த்து யாரப்பா நீ? உன் பெயரென்ன? ஏன் அழுகிறாய் அவன் ஒரு கணம் அக்குரலைக் கேட்டதும் தாய் தந்தை தன்னுடன் வந்து கதைப்பது போல் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

அவன் அழுவதை பார்த்த அவர் அவன் கண்களை துடைத்து விட்டு யாரப்பா நீ? என்று மறுகணம் கேட்க அவனது கண்களிலிருந்து கண்ணீர் மழைபோல் பொழிந்தது. தன் கண்களைத் துடைத்து விட்டு சிறிது நேரத்தின் பின் தன் கதையை சொன்னான் நான் ஒரு அநாதை ஐயா! எனக்கு சொந்தமென்று இங்கு யாருமில்லை என்று சொல்லி அழுதான் நிதிபதி அவனைத் திடப்படுத்தி தனது வீட்டுக்கு கூட்டிச் சென்றார்.

மறுநாள் காலை சிறுவர் உரிமை ஆணைக் குழுவுடன் தொடர்பு கொண்டு கமலாவை கைதடி சிறுவர் இல்லத்தில் சேர்த்தார் "அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற படி மொழிக்கிணங்க அவன் இல்லத்திற்கு சேரும் போதே மகிழ்ச்சியும் அன்பும் முகத்தில் தெரிந்தது அவன் பேசும் மொழியில் அன்பு தேன் போல் கசிந்தது அவன் மிகுந்த ஆர்வத்துடன் அன்பு சகோதரர்களின் பாசத்தில் தான் அநாதை என்பதை மறந்தான்.

தினமும் கடவுளை தியானிக்க மறப்பதில்லை. தினமும் ஆர்வத்துடன் கல்வியைப் பயின்று வந்தான் அவன் இல்லத்திற்கு வந்து இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. ஆவன் பத்து வயதில் புலமைப் பரிசில் பரீட்சை நிலைக்கு கல்வியை மிக நுண்மையாகவும் ஆர்வத்துடனும் கற்றுவந்தான் அவன் ஆர்வத்தை கண்டு ஆசிரியர்களும் மாணவர்களும் அவனுக்கு ஊக்கம் கொடுத்து கற்பித்தார்கள். ஆடிமாதம் முன்னோடி பரீட்சை எழுதினான் அதிலே சித்தியடைந்துவிட்டான். ஆவணி மாதம் இறுதித்தேர்வை மிக இலகுவாக செய்துவிட்டு வந்தான்.

அவனிற்கு தான் சித்தி பெறுவேன் என்ற நம்பிக்கை இருந்தது. அனைவரும் அவனது பரீட்சை முடிவுக்காக காத்திருந்தார்கள் முடிவுகள் வெளியாகின. இலங்கையிலேயே சிறப்பு தேர்ச்சி பெற்று சித்தியடைந்தவன் இவனே. இவனுக்கு பல பரிசில்கள் கிடைத்தன. இவனை இல்லத்தில் சேர்த்த நீதிபதி அவனை பாராட்டினார். அவன் அவர் கால்களில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றான். இதில் அவனது பணிவையும் கண்டு அவனை பாராட்டினார்.

இவன் தனது இல்லத்தின் உயர்விற்கும், பாடசாலையின் அபிவிருத்திற்கும் பெரும் பாடுபட்டு அயராது உழைத்தான். இவனது புலமை பரிசில் சித்தி காரணமாக பழைய மாணவர் சங்கம் பாடசாலைக்கு கலைநிகழ்சி மண்டபமொன்றை கட்டிக்கொடுத்தது. இவன் கல்விக்கோ, ஒழுக்கத்திற்கோ எதுவாக இருந்தாலும் அவனிடம் அவற்றிற்கு குறைவில்லை.

கமலன் கல்வித்துறையில் மட்டுமல்ல கலைத் துறை மற்றும் விளையாட்டுத்துறையிலும் கூட சிறந்து விளங்கினான். விளையாட்டுத்துறையிலே சட்டமா அதிபரிடம் ஓட்ட வீரர் என்ற பட்டத்தைப் பெற்று பல பரிசில்கள் பெற்று பாடசாலைக்கு பெருமை நாட்டினான். கலைத்துறையில் அவன் நல்ல இனிமையாகப் பாடுவான். நுண்கலை மன்றம், இளங்கலைஞர் மன்றம் ஆகிய மன்றங்களில் பாடி பட்டங்களைப் பெற்றான். தமிழ்த்தினப் போட்டியில் தனிப்பாடலில் தேசிய மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்று பாராட்டுப் பெற்றான். அவனே பாடசாலை வீரனாகத் திகழ்ந்தான்.

அவன் சிறு வயதிலிருந்தே தன்னை இங்கு சேர்த்து விட்ட நீதிபதி போல் வர வேண்டும். என்ற ஆர்வம் இருந்தது. தன் இலட்சியத்தை அடையும் பொருட்டு க.பொ.த. பரீட்சையில் இலங்கையில் முதல் புள்ளி பெற்றான். அவனைப் பாராட்டி கொழும்பு றோயல் கல்லூரி அவனை உயர் கல்விக்கு அழைத்தது.

அவன் தனது குறிக்கோள்களை அடையும் பொருட்டு கொழும்பில் அவன் தனது உயர்கல்வியை மேற்கொண்டு உயர் கல்வியில் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக் கழகத்தில் சட்டத் தரணியாக கல்வி பயின்றான் அவன் பல்கலைக் கழகத்திலும் பெரும் திறமை மிக்கவனாய் விளங்கினான்.

கமலன் சட்டத்தரணி படிப்பில் ஐந்து வருடங்களின் பின் பல்கலைக்கழக இறுதிப் பரீட்சையில் சிறப்பு பெறுபேற்றைப் பெற்று அவன் அவ்வருட பல்கலைக்கழக முதல்வன் என்ற பெயரில் பட்டம் வழங்கி சட்டத்தரணிப் பட்டத்தையும் பதவியையும் வழங்கியது. அவன் அன்றிருந்து கொழும்பு நீதிமன்றத்தில் நீதியும் கடமை புரிந்தான்.

அவன் புகழ் ஈழத்தில் எங்கும் பரவியது. பத்திரிகைகளில் அவன் புகழுரை வெளிவந்தன. எல்லோரும் அவனுடன் தொடர்பு கொண்டு அவனைப் பாராட்டினார்கள். ஆனாலும் அப்போது அவன் மனதில் ஓர் சங்கடம் ஏற்பட்டது. என் வாழ்வில் ஒளி தந்த குருவாகிய நீதிபதியை காணவில்லை என்று எண்ணினான் அவர் என் புகழைக் கேட்டு மகிழ்ந்து என்னிடம் ஓடோடி வந்திருப்பார் என்று சந்தேகமடைந்த அந்த கனமே யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டான். அவர் வீட்டிற்கு வியர்வை வழிய வழிய ஓடி வந்து பார்த்தான் அவரை அங்கு காணவில்லை அவர் ஆஸ்பத்திரியில் இருப்பதாக அறிந்து கொண்டான்.

அங்கு சென்று அவர் கால்களில் விழுந்து அழுதான் அவர் அவன் கண்களை துடைத்து விட்டபோது இருவரது மனதிலும் பழைய நினைவு ஞாபகத்திற்கு வந்தது அவர் மகனே நீ அழக் கூடாது என்று ஆறுதல் கூறினார் அவர் அவனை கொழும்பு ஆஸ்பத்திரிசிகிச்சை கொண்டு வந்து அவர் வருத்தத்தை குணப்படுத்தினான்.

அவர் அவரை வாழ்த்தி நீ என் பிள்ளை என்று செல்லமாக அரவனைத்தார் அவர் தன்னை இந் நிலைக்கு ஆளாக்கிய இல்லத்து சேவையை மறந்து விடாமல் சேவையாற்றிக் கொண்டிருந்தான் அவனைப் போல் அங்குள்ள மாணவர்களும் வளர வேண்டும் என்ற ஆசையில் தன் குருவின் வழியினிலே செயற்பட்டான். அவனது ஒழுக்கத்தையும் திறமையையும் பாராட்டி ஒழுக்க மகாசீலன் என்ற பட்டத்தினை கொழும்பு றோயல் கல்லூரி வழங்கியது. குருவின் பெயரில் ஓர் இல்லத்தை அமைத்தான் அவன் பணிவை பாராட்டினார் அவனுக்கு நல்ல சட்டத்தரணி போன்ற ஒரு அழகான பெண்ணை குருவே முன்னின்று அவனுக்கு திருமணம் செய்து வைத்தார். இவர்கள் எல்லோரும் நன்றாக கமலனது அன்பிலே இன்பமாக வாழ்ந்தார்கள் கமலனும் அவர்கள் அன்பில் மிக மகிழ்ந்து சுதந்திர கிளியாய் வாழ்ந்தான்.

ராதிகா. செ
தரம்-11

கதை

## கடல் கொண்ட கோபம்

அன்று 2006ஆம் ஆண்டு 26ம் திகதி மார்கழி மாதம் இலங்கை தீவே அன்று அமைதி அடைந்திருந்தது. ஏனோ அன்று மிருகங்கள் எல்லாம் தம் இருப்பிடத்தை விட்டு உயரமான இடங்களை நோக்கி நகர்ந்து கொண்டு இருந்தன. கடலிலும் அன்று சிறுமாற்றம் கடலின் நடுப்பகுதியிலே சக்கரங்கள் போலே நீர் சுற்றியது. திடீரென மேலெழுந்து கரையை நோக்கி வேகமாக வந்தது. கடற்கரையில் நின்ற ஒருவரையும் திடீரென காணவில்லை.

கடலன்னையின் சீற்றம்தான் ஏனோ! பிஞ்சுக் குழந்தைகள் தம் நெஞ்சம் மகிழ்ந்து கடற்கரை மண்ணிலே தவண்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். கொஞ்சும் மழலைகள் கூட உன்அகோர பசிக்கு உணவானார்களா? கடற்தாயே! உன்வரவு கண்டு இன்புற்று மகிழும் வேளையில் எம்மக்கள் இனத்தின் ஆவலிற்கு இன்று நீ தந்த பரிசா இது ! கடலும் கடல்சார்ந்த இடமும் இன்றும் நிலத்துகிலுடுத்தி நீள்வானவாய் பரந்திருந்து எத்தனை கவிஞர்களை கவிபாட வைத்த நீ இன்று ஏன்தான் அவர்களின் வாயை அடக்கி வைத்தாய் உன் கோரப்பசிக்கு ஒன்றா இரண்டா எத்தனை உயிர்களை காவுகொண்டாய்.

கடலன்னையே நீ எம்மக்கள் மத்தியில் எவ்வாறெல்லாம் போற்றப்பட்டாய். ஆனால் இன்று சுனாமி என்று பெய் கொண்டு எம்மை ஏன் ஆட்டிக்கொண்டு இருக்கிறாய். எத்தனையோ மழலைகள் தம் தாயைக் காணாமல் 'வெயிலில் துடித்த புழுவைப்போல்' துடித்துக் கதறியபடி இன்னொரு திசையிலே குழந்தைகளை பறிகொடுத்த தாய்மார் தம் குழந்தைகளை காணவில்லை எனக் கதறுகின்றனர். இப்போது அருகிலிருந்து கடற்கரை மண்ணிலே கவிபாடிக்கொண்டிருந்த எம் குழந்தைகளை ஏன் தான் நீ இன்று காவு கொண்டாயோ.

எம்மினம் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி உறங்க வீடின்றி திண்டாடித்திரிய எல்லாவற்றையும் பறித்த சுனாமியே நீ அமைதியாகி இருக்கின்றாய் நிலத்துகிலுடுத்தி நீள் வான் போல பரந்திருப்பாய் என எம் மக்கள் சொல்வார்கள். ஆனால் இன்று செக்கச்சிவந்த செவ்வானம் போல இரத்தக்கறைகளும் எம் மக்களினத்தின் உடலுமாக உன் மேனிதனில் தவழ்கிறது.

கடலின் நடுப்பகுதிவரை சென்று மீன் பிடித்திருந்த மீனவர் கூட்டம் அம்மீனவர்களின் வரவை எதிர்பார்த்து கடலோரத்திலே காற்று வாங்கி நின்ற அம்மீனவரின் உறவுகளை எல்லாம் எங்கே ஒரு நொடிப்பொழுதில் காணவில்லை இனியும் உன்னை விரும்பி கடற்கரையோரம் வந்து கவிஞர்கள் கவிபாடுவார்கள் என்று மட்டும் நினைக்காதே. அப்படிக்கவி தொடுத்தாலும் உன் அழகை வியந்து பாடுவதா அல்லது நீ செய்த கொடுமைகளை எண்ணிப்பாடுவதா தெரியவில்லை. புதுவருடம் பிறக்க புத்தாடை புனைந்து புதுப் பானை தன்னிலே பொங்கி குதூகலிக்க எண்ணியிருந்த எத்தனையோ மனிதர்களை ஒருகணப்பொழுதில் மறைத்தாயே. கடலலையே நீ ஆடி அசைந்து வந்து கடற்கரையை உன் இறக்கைகளால் ஓங்கிஅடித்துவிட்டு செல்வாயே அந்த நினைவுகளை ஒருபொழுதும் மறக்க முடியாது.

கடற்தாயே ! நீ உயிர்களை காவுகொண்டது மட்டுமல்ல நாளை உலகிலே சிட்டுக்களாய் சிறகடிக்க எண்ணியிருந்த எத்தனை மழலைகளை அவர்களது எண்ணங்களை கற்பனைகளை எல்லாவற்றையுமே காவு கொண்டாய். நீ நினைத்தாய் உன் கோரப்பிடியில் பலியானவர்கள் எம்குழந்தைகள் பெற்றோர்கள் உறவுகள் என்று ஆனால் அவர்களது எதிர்காலத்தையும் பறித்துச் சென்றாய். எம் மக்களுக்கு சற்றுக்கவலை வந்தாலும் சரி கடந்த கால நினைவுகளைப் புரட்டிப்பார்க்க விரும்பினாலும் சரி உன் தரை நோக்கி தினமும் வருவார்கள். தங்கள் உள்ளத்திலுள்ள கவலைகளை எல்லாம் உன்னோடு பகிர்ந்து கொள்வார்கள் நீயும் அவர்களிற்குஆறுதல்சொல்வதைப் போல உன மெல்லிய தென்றல் காற்றைஒருகணம் எழுப்பி மக்களின் முதுகிலே தட்டிச் செல்வாய்அவ்வாறு எம் துயர் தீர்த்த நீ. இன்று எம்மையேதுயரில் அழ வைத்தாய் .

முற்பிறப்பில் நாம் ஏதும் தவறுகள் உனக்குச் செய்தோமோ தெரியவில்லை அப்படி இருந்தாலும் எம்மை பலியெடுக்க இது தான் உனக்கு தருணமாகக் கிடைத்ததோ நாம் தவறு செய்திருந்தாலும் பிஞ்சுக் குழந்தைகள் மழலை மொழி பேசுபவர்கள் உனக்கு என்ன செய்தார்கள். அவர்களையாவது விட்டுச் சென்றிருக்கலாமே ஆடி ஆடி எப்போதும் எம்மை நாடி கடற்கரை வரை வந்து சென்றது. இதற்குத்தானா இலங்கைத்தீவே சாந்தி அடைந்து நிற்கிறது. இனியாவது உன் சீற்றத்தை சற்றுக் குறைப்பாய் உன் மீதுகவிபாட நாம் காத்திருந்தோம் இனியும் காத்திருப்போம் ஆனாலும் எம் மனதை விட்டு எம் உறவுகளின் தேடல் ஓயாது கடலன்னையே சற்றுப் பொறுமையாக இரு.

டினோசியா. இ
தரம்-10

**சுனாமி**

## பக்தியின் மொழி தமிழ்

அலைபாயும் மனத்தை ஒரு நிலைப்படுத்தி செயற்பட வைப்பதற்கு என்ன வழி என்ற தேடல் உலகெங்கும் நடைபெறுகின்றது. மக்களின் வாழ்வியல் நடைமுறைகள் மிக வேகமாக செயற்படுகின்றன. காலத்தின் கடப்பை விட உருண்டு கொண்டு இருக்கிறது. இளமையும் முதுமையும் போட்டி போட்டுக்கொண்டிருக்கின்றன. இதனால் மனித மனங்களின் அமைதியின்மையே தோன்றியுள்ளது. எனவே மனித மனத்தை ஆற்றுப்படுத்த ஒரு சீர்மியல் செயற்பாடு உடனடியாகத் தேவைப்படுகின்றது.

உலகெங்கும் இத்தகைய தேடல் நடைபெறும் வேளையில் எமது முன்னோர்களின் அறிவூட்டல்களை ஒரு முறை நாம் எண்ணிப்பார்ப்பது நன்று. நாளந்த வாழ்க்கையை நல்ல முறையிலே மனநிறைவுடன் பயன்பட வாழ்வதற்கு அவர்கள் காட்டிய வழிபாட்டு நெறி இன்றும் ஏற்றதாயுள்ளது. திருக் கோயிலுக்குச்சென்று வழிபாடு செய்யும் போது மனஅமைதியும் நிறைவும் ஏற்படும் என்ற அனுபவத்தை அவர்கள் எடுத்துரைத் துள்ளனர்.

சமயக்குரவர்களில் வயதில் மிக இளையவரான ஞானசம்பந்தர் காட்டும் வழிகாலத்திற்கு நாள்தோறும் திருக்கோயில் செல்வது என்ற நியமத்தை முதலில் ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு அங்கு சென்று நீரும் மலரும் தூவி சித்தத்தை நிலைப்படுத்த வேண்டும். அவர்கள் சிவனருள் பெறுவார்கள். சம்பந்தர் தனது அனுபவத்தை பாடலிலே கூறியுள்ளார். கோயில் வழிபாடு வாழ்வைச்செம்மைப்படுத்தும் என்பதில் சம்பந்தருக்கு நல்ல நம்பிக்கை இருந்தது. கோயிலின் சூழல் மனித மனத்தைப் பரவசப்படுத்தும். வளமான நீர்வளம் நிறைந்த கோயில் ஒன்றைக் காட்டுகின்றார். யானையின் கோடும் மயிற்பீலியும் வாரிக்கொணரும் தந்து நீராப் பொன்னியின் அழகுக்கோலம் அவரைக் கவர்ந்தது போலவே எல்லோரையும் கவரும் என எண்ணினார்.

திருச்சாய்க்காடு என்னும் திருத்தலம் இயற்கை எழிலுடன் மக்கள் மனங்கவரும் அழகிய வழிபாட்டுத்தலமாகும். பொன்னி நதியின் நீர்வளம் அங்கமைந்த சிவன் கோயிலின் சூழலை மேலும் குளமையுறச் செய்துள்ளது. நாள்தோறும் அங்கு கால்கள் செல்ல கைகள் மலர் பறிக்க மனம் இறை சிந்தையில் ஈடுபட்டுப் பரவசம் அடையும். புறத்தே தாக்கிய உணர்வுகள் எல்லாம் ஒழியக் கோயிலின் கோல அழகில் மெய்மறந்து நிற்கும் மக்களைச் சம்பந்தர் அன்று காட்டினார். இன்று வரையும் அது மனித மனங்களை வசப்படுத்தும் பாடலைப் படிப்போர் இதனை நன்குணர்வார்.

"நித்தலும் நியமஞ் செய்து நீர் மலர் தூவிச் சத்தமொன்றை
வல்லார்க் குரளஞ் சிவன் கோயில்
மத்தயானையின் கோடும் வண்பீலியும் வாரித் தந்து நீரப்
பொன்னி சாசரமேவு சாய்க்காடே"

கிருபாலினி. ச
தரம்.10

## முயற்சி

பாலன், சீலன் இருவரும் வகுப்பறை நண்பர்கள். பாலன் நன்கு படிக்கக்கூடியவன். சீலன் படிப்பில் குறைந்தவன். பாலன் மிகவும் ஏழை. ஆனால் சீலனோ பணக்காரவீட்டுப்பிள்ளை. அன்று திங்கட்கிழமை வழக்கம் போல் பாடசாலை முடியும் மணி அடித்தது. பாலன் வேகமாக செயற்பட்டான். பாடசாலை விட்டதும் சீலனிடம் விடைபெற்றுக்கொண்டு வேகமாக வெளியேறி வீதி வழியாக ஓட்டமும் நடையுமாக சென்றான். பாடசாலை விட்டதும் ஓட்டமும் நடையுமாக செல்கிறானே என எண்ணியவாறு அவன் செல்லும் திசையை நோக்கி தானும் சென்றான்.

வேகமாக சென்ற பாலன் ஒரு கடையின் திண்ணை ஒரத்தில் தனது பாடசாலை புத்தகப்பையை வைத்துவிட்டு தனது பாடசாலை உடையையும் மிற்றி ஒர கிழிந்த சேட்டும் அழுக்குப்படிந்த காற்சட்டையையும் அணிந்துகொண்டு வந்து அக்கடையின் திண்ணையில் இருந்து பல சப்பாத்துக்களை எடுத்து வெளியில் வைத்து அதில் ஒரு சப்பாத்தை எடுத்து தைக்கத் தொடங்கினான்.

இவற்றை மறைவில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த சீலன் நேராக பாலனிடம் வந்தான். சீலனைக் கண்ட பாலன் சிரிப்புடன் வரவேற்றான். சிலனோ என்னடா பாலா? நீ இந்தத் தொழிலா செய்கிறாய்? எனக் கேட்டான். இப்படித் தொழிலும் செய்து கொண்டு எப்படிப் படிப்பிலும் முதல் மாணவனாய் இருக்கிறாய் என்று கேட்டான். இதற்கு பாலன் எல்லாமே "முயற்சி" தான் காரணம். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்ற பொன் மொழிக்கு அமைய நானும் முயற்சி செய்து கஸ்ரப்பட்டு உழைக்கின்றேன். இரவு நேரம் தான் நன்றாகப் படிக்கின்றேன்.

இதனால் முதல் மாணவனாக வர முடிகின்றது என்றான். அதனைக்கேட்ட சீலன் பாலனைப் பாராட்டினான். தனது நிலையை எண்ணி வெட்கப்பட்டான். நானும் இனிமேல் உன்னைப்போலவே வாழ்வேன் என்று கூறி பாலனுக்குரிய கல்விக்கான செலவை அன்று தொடக்கம் தானே பொறுப்பேற்றுக் கொண்டான். பாலன் மிகுந்த நன்றி தெரிவித்து சீலனைக் கட்டி அணைத்துக் கொண்டான்.

கோ.சர்வேஸ்வரி
தரம்--09.

## அறியக்கூடியவை

1. முதலில் பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்
   - சார்லம் வில்கின்
2. பதவிக்காலத்தில் இறந்த முதல் ஜனாதிபதி
   - சாவநிர்உசேன்
3. முதலில் பெண்படை உருவாக்கப்பட்ட நாடு
   - நியுசிலாந்து
4. தேவங்களில் குறிப்பிடப்படாத மிருகம்
   - யானை
5. ஒரு கண்ணைத் திறந்து படுத்துறங்குவது
   - டொல்பின்
6. உலகின் முதல் பெண் பிரதமர்
   - சிறிமாவோ பண்டாநாயக்க
7. கண்ணிமை அற்ற ஊரும் உயிரினம்
   - பாம்பு
8. முட்டையிடும் பாலூட்டி
   - பிளாற்றிபஸ் [Platypus]
9. குரைக்கத் தெரியாத நாய் வகை
   - பாசஞ்சி
10. கழுத்து வழியாக முட்டையிடுவது
    - நத்தை
11. மிகப்பெரிய வாயுள்ள விலங்கு
    - நீர்யானை
12. யானை நுகரும் நரம்புள்ள உறுப்பு
    - வாய்
13. எமது உடலிலுள்ள மொத்த நரம்புகள்
    - 72,000
14. யூதர்களின் புனித நூல்
    - பேேர்
15. கதிர் வீச்சு ஊடுருவ முடியாத கனியம்
    - காரீயம்
16. நாம் உடலில் மாற்ற இயலாத ஒரு உறுப்பு
    - ஈரல்
17. முதல் வானியல் நூல் சூரிய சித்தாந்தம்
18. செவ்வாயில் இறங்கிய முதல் விண்கலம்
    - வைகிங்
19. நமது உடலில் கதிர்வீச்சை நன்கு உணரும் பொருள்
    - இரத்தம்
20. தந்தை நாடு என அழைக்கப்படும்
    - ஜேர்மனி
21. இரத்தத்தால் எழுதப்பட்ட மத நூல்
    லங்கா வீரன் சுத்ரா
22. கழுத்தற்ற ஈருடகவாழி
    - தவளை
23. பற்கள் அற்ற ஓர் உயிர்
    - ஆமை
24. வால் மூலம் சுவாசிக்கும் மீன்
    - சேற்று மீன்
25. மூன்று வயிறுகள் உள்ள உயிரினம்
    - ஒட்டகம்
26. உணவை கழுவி உண்ணும் விலங்கு
    - ரெக்ஸன்
27. வாய் மூக்கில் பல்லுள்ள உயிரினம்
    - முதலை
28. சுத்த சைவமான விலங்குகளில் ஒன்று
    - காண்டாமிருகம்
29. ஆணின் வயிற்றில் கர்ப்பம் சுமக்கும் உயிரினம்.
    - கடற்குதிரை
30. ஆயுட்காலம் முழுவதும் வளர்வன
    - மீன், யானை

## வசந்தம்

தத்தித் தவழ்ந்து தங்கத் தாரகைதனில்
உதித்தது ஓர் வசந்தம்.
பிஞ்சுக் குழந்தையில் என் தாய் நெஞ்சம்
மகிழ வைத்த குறும்புகள்
ஓர் வசந்தம்.
பாலர் வகுப்புதனில் என் முதல்
ஆசானைக் கண்டது ஓர் வசந்தம்.
பள்ளி முடிந்ததும் என் இல்லம் அடைந்ததும்
என் தாயின் வதனம் கண்டது
ஓர் வசந்தம்.

என் வாழ்வை மிளிர விட சைவச்சிறார் இல்லம்
வந்தது ஓர் வசந்தம்.
இல்லந்தனிலே ..................
என் குருவின் பாதார விந்தங்களை
ஆதாரமாகக் கொண்டு கற்ற
பல கலைகள் ஓர் வசந்தம்.
பாடசாலை வளாகம்தனில்
பண்பான அன்பான
நண்பர்களை கண்டது ஓர் வசந்தம்.
கல்விதனில் கரையேற
ஒழுக்கம்தனில் சிறந்தோங்க
பண்புதனை பறை சாற்ற
ஆன்றோர் சபைதனில் நான்
கல்விக் கடலாய் பெருக்கெடுக்க
இவ் இல்லம் கிடைத்தது ஓர் வசந்தம்
இவற்றிற்கு ஈடாக எமக்கேதும்
வசந்தம் இனித் தேவையில்லை

இ. பிரியங்கா
தரம் - 10.

## மனம் ஒரு குரங்கு

ஒரு ஊரில் சன்னியாசி ஒருவர் வசித்து வந்தார். அவரிடம் ஒரு சீடன் போய்க்கேட்டான் உங்களால் எப்படி மனதை ஒரு நிலைப்படுத்தி தவம் செய்யமுடிகிறது? என்னால் அவ்வாறு தவம் செய்ய முடியவில்லை அதற்கு ஒரு வழி சொல்லுங்கள் என்றான்.

இதற்கு அந்த சன்னியாசி மனதை ஒரு நிலைப்படுத்துவதென்பது மிகவும் சிரமம் அது எளிமையான காரியம் இல்லை இதை விளக்க நான் உனக்கு ஒரு கதை சொல்கிறேன் என்றார். அதற்கு அந்தச் சீடன் ஒத்துக்கொண்டான். சன்னியாசி கதை சொல்ல ஆரம்பித்து விட்டார்.

ஒரு ஊரில் உள்ள காட்டில் குரங்கு ஒன்று வசித்து வந்தது. அதற்கு நீண்ட நாள் ஒரு ஆசை இருந்தது. அது என்னவென்றால் நான் ஒரு நாளாவது நீண்ட கடும் தவம் இருக்க வேண்டும. என்பதாகும் அதற்கு அந்த சந்தர்ப்பம் ஒரு நாள் கிடைத்தது. அந்தக் குரங்கு ஒரு மலையின் மேல் ஏறியிருந்து தவம் செய்ய ஆரம்பித்தது.

சிறிது நேரத்தில் அதற்கு மனதில் ஒரு எண்ணம் தோன்றியது அது என்னவென்றால் நான் கடும் தவம் இருக்கிறேன். இன்று முழுவதும் நான் சாப்பிடாமல் இருந்தால் நான் மரத்தில் தாவி பழங்களைப் பறிக்க முடியாமல் போய் விடும் நான் பின்னர் பட்டினியால் இறந்து விடுவேன் என்பதாகும். அது உடனே எழுந்து சென்று பழங்களைப் பறித்து வந்து ஒரு மூலையில் போட்டு விட்டு மீண்டும் தவம் செய்ய ஆரம்பித்தது.

சிறிது நேரத்தில் மீண்டும் அதற்கு ஒரு எண்ணம் தோன்றியது. நான் பட்டினியால் சோர்ந்து விடுவேன் அதனால் அப்பழங்களை கைகளை நீட்டி எடுக்க முடியாமல் போனால் என்னிலமை என்னவாகும்? உடனே எழுந்து சென்று பழங்களை எடுத்து வந்து தன் மடியில் போட்டு விட்டு மீண்டும் தவம் செய்ய ஆரம்பித்தது.

மீண்டும் அதற்கு ஒரு யோசனை தோன்றியது நான் இன்று சாப்பிடாமல் கடுந்தவம் செய்கிறேன். நாளை என்னால் எழும்பக்கூட முடியாது இப்பழங்களை எடுத்து உண்பதற்கு கை கால் மறுத்தால் நான் என்ன செய்ய முடியும் இவ்வாறு யோசித்த குரங்கு ஒரு பழத்தை எடுத்து வாய்க்குள் போட்டது. அதன் இனிமையை அது இரசித்து ருசித்து உண்டது. அதனால் வாயால் மந்திரங்கள் சொல்ல முடியாமல் இருந்தது. ஏனெனில் அதன் வாய்க்குள் பழம் இருந்தது.

பின்னர் கண்களைத் திறந்து முழுப்பழங்களையும் உண்டு முடித்தது. பின்னர் அதற்குதவம் செய்கின்ற எண்ணம் மறந்து போயிற்று அது உடனே நித்திரை செய்தது. என்று கூறி சன்னியாசி கதையை முடித்தார்.

உடனே அச்சீடன் மனதை ஒரு நிலைப்படுத்துவது சிரமம் அதற்கான பயிற்சிகளை நான் செய்ய வில்லை அது என் தவறு இனி நான் கடும் பயிற்சி செய்து மனதை ஒருநிலைப்படுத்த வேண்டும். மனம் ஒரு குரங்கு என்பது உண்மை என்று புரிந்து கொண்டான்.

உடனே சன்னியாசிக்கு நன்றி கூறி நான் சிந்தித்து செயற்படுகிறேன் என்று கூறி விடை பெற்றான்.

ரவீனா: ரவீந்திரன்
தரம்:11

## அனாதை

அநாதை என்பது என்ன?
தாய் தந்தை அற்றவரா?
கல்வி அறிவு அற்றவரா?
சுற்றம் சூழல் அற்றவரா?

சிறுவர்கள் இன்று அநாதைகளா
சிறுவர் இல்லங்கள் இருக்கையிலே
முதியோர் இன்று அநாதைகளா
முதியோர் இல்லம் இருக்கையிலே
இளமைக் காலத்தில் தம் பொழுதை
வீணே கழித்த மனிதர்களே
முதுமைக் காலத்தில் அநாதைகளாம்
இளமைக் காலத்தில் உன்னை நீ
சரியாயப் புரிந்து செயற்பட்டால்
அநாதைகள் என்ற சொல் ஒன்று
அழிந்து போய் விடும் இருக்காது
அதை நீ இன்றே புரிந்து விடு

புண்ணிய பாவம் தெரியாமல்
மனிதன் படைப்புப் புரியாமல்
மனித வாழ்வே மறந்து விட்டால்
அநாதை நிலையம் வந்திடுமோ
மனிதா மனிதா மறந்திடாதே
படைப்பின் நோக்கை மறந்திடாதே
பல பல புத்தகம் கற்றுவிடு
பண்பு மனிதனாய் வாழ்ந்துவிடு

அநாதைச் சொல்லும் பறந்து விடும்
ஆனந்தமாய் வாழ்ந்திடுவாய்
இன்னல்கள் யாவும் தோந்து விடும்
இன்ப உலகிலே வாழ்ந்திடலாம்

வி. இலங்கேஸ்வரன்
தரம் - 11

# கண்டு பிடித்தவர் யார் தெரியுமா?

| கண்டுபிடிப்பு | ஆண்டு | கண்டுபிடிப்பாளர் | நாடு |
|---|---|---|---|
| அச்சு இயந்திரம் | 1455 | ஜோகன்கூடன்பர்க் | ஜேர்மனி |
| ஆகாய விமானம் | 1903 | ஆர்வில்;வில்பர் | அமெரிக்கா |
| இசைத்தட்டு | 1948 | டாக்டர்பிட்டர்கோல்ட் | பிரிட்டன் |
| இயந்திரத்துப்பாக்கி | 1718 | ஜேம்ஸ்பக்கிள் | பிரிட்டன் |
| இரட்டைக்குவிவுவில்லை | 1780 | பெஞ்சமின்பிராங்கனின் | அமெரிக்கா |
| இடிதாங்கி | 1752 | பெஞ்சமின்பிராங்கனின் | அமெரிக்கா |
| ஊமைப்படம் | 1885 | லுயிஸ்வொட்டர்மேன் | அமெரிக்கா |
| ஏக்ஸ்கதிர் | 1895 | வில்கெல்ம்கே.ராண்ட்ஜங்ன் | ஜேர்மனீ |
| ஒலிபெருக்கி | 1900 | காரஸ்ஷார்ட் | பிரிட்டன் |
| ஒளிப்பதிவுமுறை | 1948 | DR.பீட்டர் கோல்ட்மார்ட் | அமெரிக்கா |
| கடிகாரம் | 1462 | பார்தோமிபு மாண்மீப்பீ | இத்தாலி |
| கண்ணாடி | 1080 | ஆக்ஸ்பர்க் | ஜேர்மனி |
| கார் | 1888 | காகல்பென்ஸர் | ஜேர்மனி |
| கால்வனோ மீற்றர் | 1834 | அண்ட்ரிமேரிஅம்பியர் | பிரான்ஸ் |
| கல்குலெட்டர் | 1642 | பாஸ்க்கல் | பிரான்ஸ் |
| கைக்கடிகராம் | 1462 | பார்த்லோமோமான்பிடி | இத்தாலி |
| சிமெண்டு | 1824 | ஜோசப்ஆஸ்ப்தின் | பிரிட்டன் |
| சினிமா | 1923 | DR. லீ. டீ. பாரஸ்ட் | அமெரிக்கா |
| செயற்கை இதையம் | 1957 | வில்லெம் கோல்ட் | நெதர்லாந்து |
| செல்போன் | 1908 | DR .J . பிராண்டன் பெரகர் | சுவிற்சர்லாந்து |
| சூப்பர் கம்பியுட்டர் | 1976 | வானடேஸ் | அமெரிக்கா |
| சைக்கிள் ரயர் | 1940 | ஜே.மீ டன்லி | பிரிட்டன் |
| தீப்பெட்டி | 1826 | ஜான் வாக்கர் | பிரிட்டன் |
| தட்டச்சுப்பொறி | 1808 | பெல்லி கிரீன் டாரி | இத்தாலி |
| நீர்முழ்கிக்கப்பல் | 1776 | டேவிட் புஸ.னஸ் | அமெரிக்கா |
| அணுகுண்டு | 1945 | ஜே.ராபர்ட் ஒப்பன் டெய்மர் | அமெரிக்கா |
| இயந்திரத்துப்பாக்கி | 1718 | ஜேம்ஸ் பக்கின் | பிரிட்டன் |
| எக்ஸ் கதிர் | 1895 | வில்ஹெல்மகே ராண்ட்கெங்கன் | ஜேர்மனி |
| குளிர்சாதனப்பெட்டி | 1850 | ஜேம்ஸ்கரிசன் அலெக்சாண்டர்காட்சன் | அமெரிக்கா |
| செயற்கை இருதயம் | 1957 | வில்வெம் கோல்ட் | நெதர்லாந்து |
| தொலைக்காட்சி | 1927 | பி.டிபார்ன்ஸ் லொரத் | அமெரிக்கா |

செ.சஞ்சிதன்

தரம்:10


## உலகில் உள்ள துணை நிறுவனங்கள் சிலவற்றின் விரிவாக்கம்

| | |
|---|---|
| IMF | - சர்வதேச நாணய நிதியம் |
| WHO | - உலக சுகாதார ஸ்தாபனம் |
| PLO | - பாலஸ்தீன விடுதலை இயக்கம் |
| FAO | - உலக உணவு விவசாய ஸ்தாபனம் |
| UNICEF | - சர்வதேச குழந்தைகள் நிதியம் |
| UNHCR | - ஐ.நா.அகதிகள் ஸ்தாபனம் |
| ICRC | - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் |
| EEC | - ஐரோப்பிய பொருளாதார ஸ்தாபனம் |
| OPEC | - பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமையம் |
| SAPTA | - தெற்காசிய நாடுகளின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை |
| IBRD | - புனரமைப்புக்கும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி |
| NASA | - ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனம் |
| FIFA | - சர்வதேச உதைப்பந்தாட்ட சம்மேளனம் |
| ICC | - சர்வதேச கிரிக்கெற் சம்மேளனம் |
| FIZ | - சுதந்திர வர்த்தக நிலையம் |
| SAARC | - தெற்காசிய பிராந்திய அமைப்பு |
| BOI | - இலங்கை முதலீட்டு சபை |
| NIE | - தேசிய கல்வி நிறுவகம் |
| LOG | - சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் |
| UNO | - ஐக்கிய நாடுகள் சபை |
| ILO | - சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் |
| WTO | - சர்வதேச வர்த்தக ஸ்தாபனம் |
| NATO | - வட அத்திலாந்திக் ஒப்பந்தம் |
| ADB | - ஆசிய அபிவிருத்தி வங்கி |
| UNESCO | - ஐ.நா.கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிறுவனம் |
| WMO | - உலக வானிலை அமைப்பு |
| IAEA | - சர்வதேச அணுசக்தி முகவரகம் |
| UNDP | - ஐ.நா வளர்ச்சித் திட்டம் |
| UNEP | - ஐ.நா சுற்றுப்புறச் செயல்முறைத் திட்டம் |
| IMO | - கடல் செயற்பாடுகளுக்கான பன்னாட்டு அமைப்பு |
| INTELSAT | - பன்னாட்டு தொலைத் தொடர்பு செயற்கைகோள் அமைப்பு |
| UNEPA | - ஐ.நா மக்கள் தொகைச் செயற்பாட்டு நிதி |
| UNCTAD | - வர்த்தக அபிவிருத்தி தொடர்பான ஐ.நாமாநாடுகள் |
| UNEFA | - ஐ.நா சனத்தொகை நிதியம் |
| UNIDO | - ஐ.நா கைத்தொழில் அபிவிருத்தி அமையம் |
| WFP | - உலக உணவுத் திட்டம் |
| CP | - கொழும்புத் திட்டம் |
| IDA | - சர்வதேச அபிவிருத்திச் சங்கம் |
| SAPTHA | - தெற்காசிய நாடுகளின் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் |

இ.அம்பிகா.
தரம் - 12

*திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும் - பாரதி.*

# இல்ல நிகழ்வுகள் சில



நவராத்திரிதின கோலப் போட்டி




முதலாவது வானவில் இதழ் அறிமுகம்





பிரார்த்தனை மண்டபத்தில் இல்லக் குழந்தைகள்

GURU Printers, 39/2, Adiyapatham Road, Thirunelvely.